2019 - இதழ் 11

இலவசம்

## கார்த்திகை - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2019 - இதழ் 11

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909
(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 11**


## 4 எழுந்திரு, இயேசு உன்னை அழைக்கினறார்

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லா
ரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளை
ப்பாறுதல் தருவேன், என்று சொல்லி இயேசு எல்லோ
ரையும் அழைக்கின்றார்.

## 6 இன்றைய நாளில்...

கடந்த காலத்தை குறித்து துக்கிக்காமல், விரயமாக்
கப்பட்ட நாட்களை குறித்து மன வேதனையடை
யாமல், இன்றைய நாளை கர்த்தருக்கு ஒப்புவியுங்கள்.
இனி இருக்கும் நாட்கள், அவை சொற்பமாக இருந்தா
லும், அநேகமாக இருந்தாலும் அவைகளை பிரயோஜ
னப்படுத்திக் கொள்ளுங்கள்.

## 11 பிரசங்கக் குறிப்புகள்

நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்க
ட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். கர்த்
தர் அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவி
ப்பார்

## 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும்
பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற
மனுஷன் பாக்கியவான்.



**கிரேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

13ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

… கார்த்திகை 4, 5, 8, 13, 15, 18, 23, 25, 26, 30

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

… கார்த்திகை 4, 5, 6, 7, 8, 10, 11, 25, 26, 30

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி**

… கார்த்திகை 6, 7, 9, 10, 11, 14

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

… கார்த்திகை 1, 2, 3, 5, 6, 7, 8, 16, 18, 23, 26, 27

**ஜெபத்தின் மேன்மை**

… கார்த்திகை 11

**நற்செய்தியை கூறுங்கள்**

… கார்த்திகை 14, 22

**சகோதர சிநேகத்தில் நிலைத்திருங்கள்**

… கார்த்திகை 12 , 21, 22

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**

… கார்த்திகை 1, 2, 3, 7, 9, 10, 15, 17, 19, 20, 21, 22, 24, 28, 29

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

… கார்த்திகை 1, 2, 3, 23, 26, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**

… கார்த்திகை 4, 5, 8, 9, 13, 23, 30

**தேவ நீதி வெளிப்படும்**

… கார்த்திகை 5, 30

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

… கார்த்திகை 12, 13, 15, 17, 19, 20 , 24

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

… கார்த்திகை 1, 6, 7, 10, 16, 17, 18, 19, 22, 24, 26, 27, 28

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

… கார்த்திகை 12, 16, 24


gtachurch.ca

# எழுந்திரு,
# இயேசு உன்னை அழைக்கின்றார்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

மனித வாழ்வில், ஆதரவு எல்லோருக்கும் மிகவும் தேவையானதொன்று.
ஏனெனில் ஆதரவினாலே வாழ்வில் ஆறுதல் உண்டாகின்றது. தன் கண
வன், தனக்கு ஆதரவாய் இருக்கும்போது மனைவியானவள் ஆறுத லடை
கின்றாள். தன் மனைவி, தனக்கு ஆதரவாய் இருக்கும்போது கணவனான
வன் ஆறுதலடைகின்றான். பெற்றோரும் தம் பிள்ளைகளின் ஆதவரவினா
லும், பிள்ளைகளும் தம் பெற்றோரின் ஆதரவினாலும் ஆறுதலடைகின்றா
ர்கள்.

ஆதரவின்றி அல்லலுறும் மனிதர்கள் அநேகர். தள்ளப்பட்டும், புறக்கணி
க்கப்பட்டும் வாழ்வில் அமைதியின்றி வாடுபவர் பலர்.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் எரிகோவுக்கு வந்திருந்தார்
கள். பின்பு அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரி
கோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு
என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிரு
ந்தான்.

அவன் இயேசுகிறிஸ்து வருகிறாரென்று கேள்விப்பட்டு; இயேசுவே, தாவீ
தின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். அவ
னைப் பேசாதிருக்கும்படி அநேகர் அதட்டினார்கள். அவனோ: தாவீதின்
குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்.

அப்போது இயேசு நின்று, அவனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள்
அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, இயேசு உன்னை
அழைக்கிறார் என்றார்கள். அவன் இயேசுவிடம் வந்து பார்வையடைந்
தான்.

ஆதரவற்ற அவனுக்கு இயேசு ஆதரவானார். இதனிமித்தம் அவன் சரீர
த்தில் ஆரோக்கியத்தையும், வாழ்வில் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்
டான். பணமுமின்றி விலையுமின்றி அவற்றைப் பெற்றுக்கொண்டான்.
எல்லா சிருஷ்டிக்கும் ஆண்டவரும் காரணருமாகிய இயேசுகிறிஸ்துவிடம்
அதைப் பெற்றுக்கொண்டான்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில்
வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், என்று சொல்லி
இயேசு எல்லோரையும் அழைக்கின்றார். அவர் பட்சபாதமுள்ள வரல்லர்.

etachurch.ca

அவர் நிச்சயமாய் ஆறுதல் தருகின்றவராயுள்ளார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

தொலைந்து போனதை தேடி கண்டுபிடிக்கவும், மீட்கவும் இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார். தேவனுடைய அன்பையும் பாதுகாப்பை யும்விட்டு தூரமாய்ப் போய் தொலைந்துபோன ஓவ்வொருவருக்குமாய் இயேசுகிறிஸ்து வந்தார். தொலைந்து போனதை கண்டுபிடிக்குமளவும் தேடுகின்ற மேய்ப்பனாக அவர் நம்மைத் தேடுகின்றார்.

தொலைந்து போன நிலையென்பது; வாழ்வில் ஆதரவற்று இனி என்ன செய்வதோ, எங்கே போவதோ என்று தெரியாத நிலைமை. இது வயது வேறுபாடின்றி மனிதரைப் பற்றிக்கொள்ளும். இன்று, நீ உன் வாழ்வில் தொலைந்து போய்விட்டதாய் உணருவாயாகில்; கலங்காதே, எழுந்திரு, இயேசு கிறிஸ்து உன்னை அழைக்கின்றார். உனக்கு ஆறுதல் தருவார்.

கூப்பிடும் யாவருக்கும் இரங்கும் தேவனானவர் தம்மை நோக்கி உண்மையாய் கூப்பிடும் ஓவ்வொருவருக்கும் பதில் கொடுத்து அவர்களை ஆதரிக்கின்றார்.

தேவனையே நம்பி, அவரைப் பற்றிக்கொண்டவனைக் குறித்து, அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்க லத்திலே வைப்பேன் என்று தேவன் சொல்லியுள்ளார்.

தேவன் உன்னைக் காக்கிறவர், அவர் உறங்குவதுமில்லை தூங்கு கிறதுமில்லை. அவர் உன் காலைத் தள்ளாடவிடுவதில்லை. அவர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

இயேசுகிறிஸ்து மனிதரை இரட்சிக்கவே உலகிற்கு வந்தார். நாம் சந்தோஷம், சமாதானத்தோடு வாழ நமது கரத்தைபபிடித்து நடத்துகின்றார். நல்ல மேய்ப்பன் கறவலாடுகளை மெதுவாய் நடத்தி குட்டிகளை தனது தோளில் சுமப்பது போல இயேசுவும் நம்மை விடுவித்து நடத்துகின்றவரா யுள்ளார்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்போடு அழைக்கின்றேன்.**

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

etachurch.ca

# இன்றைய நாளில்...

“மகனே, இளமைக் காலம் வாழ்க்கையின் வசந்த காலம். உன் வாழ்க்கையில் உறைந்த பனி கொட்டும் மாரிகாலம் வருவதற்கு முன், வசந்த காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்கால த்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் எறும்புகளைப் போல ஞானமாய் நடந்து கொள். இளவயதும் வாலிபமும் எப்போதும் இப் போது இருப்பதைப் போல இருக்கமாட்டாது. எனவே, இந்த நாட்களிலே, உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களுள்ள உணவுகளை நீ சாப்பிட வேண்டும். ஆரோக்கியத்தைப் பேண உடற்பயிற்சி செய்ய வேண்டும், நேர த்திற்கு நித்திரைக்கு செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்று சில தசாப்தங்களுக்கு முன் தன் தயார் சொன்ன போதனை மன திலே ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

வாழ்க்கையில் பல தசாப்த்தங்கள் கடந்து, இப்போது உறைந்த பனி கொட்டும் காலம் போலாகிவிட்டது. மாநகர வீதிகளிலே இருந்த கலகல ப்பை காண முடியவில்லை. பேருந்துகள், மோட்டார் வண்டிகள், மற்றும் ஏந்திர சத்தங்கள் கேட்கவில்லை. கேளிக்கை விடுதிகளில் ஒலித்த கீத வாத்தியங்கள் எல்லாம் அடங்கிப் போய்விட்டது. சூரியனையும், வெளிச் சத்தையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் பார்க்க முடியாமல் கண் களின் பார்வை குன்றிப் போய்விட்டது. உயிர் நண்பர்கள் என்று கூறிய வர்களின் இருப்பிடங்கள் தெரியாமல் மறைந்து போய்விட்டார்கள். உன் மனச்சாட்சியின்படி வாழ்ந்து கொள், நீ விரும்பினதை செய், இது உன் னுடைய வாழ்க்கை என்று ஆதரவளித்த சொந்த பந்தங்கள் இந்தப் பூமியில் இல்லை. வீட்டுக்காவலாளிகள் தள்ளாடி பெலசாலிகள் கூனிப் போனது போல என் பெலன் கடந்து போய்விட்டது. படித்தேன், உழைத் தேன், பொருட்களை சேர்த்தேன், சுகபோகமாக வாழ்க்கையில் எல்லா வற்றையும் அனுபவித்தேன் என்று, என் பெருமையை கூறினாலும், மன திலே சமாதானம் இல்லை. தாயாரின் ஞான வார்த்தைகளே மனதில் எதி ரொலித்துக் கொண்டிருக்கின்றது என ஒரு வயதான மனிதன் தன் மனதின் ஆதங்கத்தை கூறிக் கொண்டான்.

உன் நண்பர்கள் உன்னை நயங்காட்டி அழைக்கலாம். விலையுயர்ந்த சகலவிதப் பொருள்களையும் கண்டடைவோம் இந்த உலக வஸ்துக்க ளால் நம்முடைய வீடுகளை நிரப்புவோம். எங்களோடே பங்காளியாயிரு. நம்மெல்லாருக்கும் ஒரே பை இருக்குமென்று சொல்லுகிறவர்களுக்கு சம் மதியாதே. என் மகனே, நீ அவர்களோடே வழிநடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞான த்தின் ஆரம்பம் மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணு கிறார்கள். என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடி யும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும் என்று இப்படியாக பரிசு த்த வேதாகமத்திலே பல ஆலோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது.
இந்த ஜீவனுள்ள ஆலோசனைகள், இந்தப் பூமியிலே சமாதானமான வாழ்வு வாழ்வதெப்படி? இந்த பூமியைவிட்டு கடந்து செல்லும் போது,

என்னை படைத்தவரை, என் பாவத்திலிருந்து என்னை மீட்டவரை நான் சந்திக்கப் போகின்றேன் என்ற பேரானந்தத்தோடு விடைபெறுவது எப்படி என்பதையும் பரலோகிலே நித்தியரோடு, நித்திய நித்தியமாய் சுகித்தி ருப்ப தெப்படி என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

மனிதர்களில் பலர், தங்கள் சரீரத்தில் பெலன் இருக்கும்வரை வேத த்திலுள்ள ஞானமுள்ள வார்த்தைகளை, மீட்பின் நற்செய்தியை அச ட்டை செய்து கொள்கின்றார்கள். அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போனார்கள். தேவனு டைய ஆலோசனையை அவர்கள் விரும்புவதில்லை. உன்னதரின் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணிவிடுகின்றார்கள். வரு முன் காப்போம் என்ற ஞானத்தை வெறுத்து, பேதமையினால் தங்களை மூடிக்கொள்கின்றார்கள். இதனால் தங்கள் வாழ்க்கையில் பல நோவு களை உண்டு பண்ணிவிடுகின்றார்கள்.

இளமைக் காலங்களிலே, பாடசாலைகளில் சுகாதாரக் கல்வியை கற் றுக் கொடுக்கின்றார்கள். சிறார்களுக்கு எந்த நோய்களும் இல்லாதி ருக்கும் போதே ஏன் ஆரோக்கியமாக வாழ்க்கையை குறித்து ஆசி ரியர்களும் பெற்றோர்களும் வலியுறுத்தி கற்றுக் கொடுக்கின்றார்கள்? ஏனெனில், “வருமுன் காப்பது, வந்தபின் சிகிச்சை செய்வதைவிட சிற ந்தது” (prevention is better than cure) என பொருட்படும்படி சொல் லப்படும் ஆங்கில பழமொழிக்கு அமைவாக மாணவர்களுக்கு ஆரோ க்கியமான வாழ்வை குறித்த ஆலோசனைகள சிறிய வயதிலேயே வழ ங்கப்படுகின்றது. அந்த ஆலோசனைகளை பற்றிக் கொள்ளுகின்றவர்கள் பல நோய்களிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்கின்றார்கள். அந்த போதனைகளின்படி வாழாமல், சுகாதாரத்தை பேணாமல், தங்கள் ஆசையை நிறைவேற்றும்படி கண் கண்டதையெல்லாம் உட்கொண்டு, உடற்பயிற்சி செய்யாமல், குறித்த நேரத்தில் உறங்காமல் வாழ்பவர்கள் ஆண்டுகள் கடந்து சென்றதும் பல பெலவீனங்கள் அவர்கள் உடலைத் தாக்கி விடுகின்றது.

இப்படியான சூழ்நிலைக்கு தள்ளப்படும் போது, “அட நான் என் ஆசி ரியர்கள் கூறிய ஆலோசனைகளை தள்ளி விட்டதால் இப்படியான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டேன். என் பெற்றோரின் சொல்லுக்கு செவி கொடுத்திருந்தால் இவ்வளவு பிரச்சனை எதற்கு?” என்று மனம் வருந்திக் கொள்கின்றார்கள். இப்போது வைத்தியரிடம் செல்ல வேண்டும். மருந்து உட்கொள்ள வேண்டும். அது கசப்பான அனுபவம். சில வேளைகளிலே சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். அது மிகவும் நோவு நிறைந்த அனுபவம். இளமைக் காலத்திலே பெரியவர்களின் ஆலோசனையை தள்ளிவிட்டடேன் என்று துக்கித்துக் கொண்டிருக்கும் மனிதன், இப்போது வைத்தியரிடம் போக மறுக்கின்றான். மாத்திரைகளை எடுக்க விருப்பம் இல்லை. சத்திர சிகிச்சைக்கு ஆயத்தம் இல்லை. இப்படியாக மனிதர்கள் அந்தந்த காலத்திற்குரிய ஆலோசனைகளையும், வைத்தியத்தையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆனால் காலங்கள் கடந்து சென்ற பின் அதைக் குறித்து துக்கித்துக் கொள்கின்றார்கள்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், தேவன் எங்களுக்கு கொடுத்த ஈவாக இருப்பது போல, எங்கள் ஆத்துமா கெட்டுப்போகாமல் இருப்பதற்கு பல

ஆலோசனையான ஜீவ வார்த்தைகளை அருளிச் செய்திருக்கின்றார். கர்த்தருடைய வார்த்தையே எங்கள் ஆத்துமாவின் ஆகாரம் (ஜீவ உணவு). ஆவிக்குரிய வாழ்க்கையின் ஊட்டச் சத்து. சில வேளைக ளிலே தான் நேசிக்கின்ற மகனை சிட்சிப்பது போல (நன்மைக்காக கண் டித்து தண்டிப்பது), அவர் நாங்கள் மதியீனமாக நடக்கும் போது உண ர்வடையச் செய்கின்றார். தேவ ஆலோசனைகளை வெறுத்துத் தள்ளுகி ன்றவன் பிடிவாதமுள்ள பிள்ளைகளைப் போல தன் மனதை கடுமைப் படுத்தி, மறுபடியும் பாவம் செய்து தேவனைவிட்டு தூரம் போய்விடுகின் றான். பல ஆத்தும நோய்களை தனக்கு உண்டு பண்ணிக் கொள்கி ன்றான். இப்படியாக பாவ நோயாலே நாங்கள் வாடும் போது எங்கள் கர்த்தராகிய இயேசு எங்கள் பரம மருத்துவர் ஆகின்றார். அவருடைய வார்த்தையே எங்கள் ஆத்துமாவின் அருமருந்து. எங்கள் ஜீவியத்தின் ஔஷதம்.

எனவே ஒருவேளை நாங்கள் ஆலோசனைகளை தள்ளி ஆத்தும நோய் கொண்டவர்களானால், தேவன் அருளும் அருமருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு வேளை அது கசப்பான அனுபவமாக இருக் கலாம் அல்லது தற்காலத்திலே நோவு நிறைந்ததாக இருக்கலாம். அன் றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த் துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளு க்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திம தியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் தகப்பன் சிட்சியாத புத்திர னுண்டோ? எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களு க்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். (எபிரெயர் 12:511)

எடுத்துக் காட்டாக, உங்கள் இருதயத்திலே கசப்பான வேர் முளைத் தெழும்பாதபடி எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதம் ஆலோசனை கூறுகின்றது. அதற்கமைய, ஒருவரோடு வாக்குவாதம் ஆரம்பிக்கு முன் அதைவிட்டு விட்டு அந்த நபரோடு உடனடியாக ஒப்புரவாகிவிடுதல் நல்லது. அப்படி எந்த ஆலோசனையையும் கேளாமல், கசப்பை மன தில் வளரவிடும் போது, அது பெரும் விருட்சமாகி, வாழ்க்கையின் சமா தானத்தை கெடுத்து, இருதயத்தை கடினப்படுத்தி விடும். இது ஆத்து மாவின் நோய். இதை மாற்றியமைப்பதற்கு, முதலாவதாக, சம்மந் தப்பட்டவர்களை மன்னித்து மறந்து விட வேண்டும். நாங்கள் குற்றம் செய்திருந்தால், தாழ்மையுள்ளத்தோடு சம்பந்தப்பட்டவர்களிடம் மன்னி ப்பை பெற்றுக் கொண்டு ஒப்புரவாக வேண்டும். இது ஆத்துமாவின் அருமருந்து. சில வேளைகளில் எங்கள் கௌரவம் இதற்கு இணங் காமல் இருக்கலாம். இது ஒரு கசப்பான அனுபவமாக இருக்கலாம். இப்போது நீங்கள் தேவ வார்த்தையின்படி வாழவிரும்பினால், நீங்கள் இந்த அருமருந்தை உட்கொள்ள வேண்டும். வேறு வழி இல்லை.

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமா யிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக் குகிறதுமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்ல

மையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (சங்கீதம் 19:11, எபிரெயர் 4:12, 2 தீமோத்தேயு 3:16-17)

இன்று இந்த கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் எந்த வயதுடையவரானாலும், கடந்ததை நினைத்து துக்கித்துக் கொண்டிருக்காமல், கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுங்கள். ஒரு வேளை உங்கள் சரீரம் வயதடைந்திருக்கலாம். அதை குறித்து கவலையடையாதிருங்கள். தேவனுடைய வார்த்தையின்படி இந்த பூமியிலே பிறக்கின்ற எந்த மனிதனின் உடலும் ஒரு நாள் மண்ணுக்குத் திரும்பும். எனவே, உங்கள் ஆத்துமாவை குறித்த கரிசனையாயிருங்கள். உங்கள் ஆத்துமா வயதடைவதில்லை. கர்த்தருடைய வசனம் உங்கள் ஆத்துமாவை இளமை போல புதுப்பிக்கின்றதாயிருக்கின்றது. இளைஞர் இளைப்படையும் காலம் வரும். வாலிபர்கள் சோர்ந்து போகும் நேரம் வரும். ஆனால், கர்த்தரை நம்பி, அவருடைய வார்த்தையின்படி தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளுகின்றவர்கள் தங்கள் ஆத்துமாவை புதுப்பித்துக் கொள்ளுகின்றார்கள். கர்த்தருடைய ஆலோசனையின் வழியில் எப்போதும் நடக்கின்றவர்களின் ஆத்துமா, காலங்கள் கடந்து சென்று, வயோதிபம் அடைந்தாலும், நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு, பெலனடைந்து கொண்டே இருக்கும். (ஏசாயா 40:28-31, 2 கொரி 4:16)

இல்லை நான் தேவனுடைய வார்த்தையின் வழியில் நடக்கமாட்டேன் என்று நீங்கள் தீர்மானம் எடுத்தால், நீங்கள் எந்த வயதெல்லையுடையவராக இருந்தாலும். பரிசுத்த வேதாகமம் இவ்வண்ணமாக கூறுகின்றது. “பேதைகளே, நீங்கள் பேதைமையை விரும்புவதும், நிந்தனைக்காரரே, நீங்கள் நிந்தனையில் பிரியப்படுவதும், மதியீனரே, நீங்கள் ஞானத்தை வெறுப்பதும், எதுவரைக்கும் இருக்கும். என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள் இதோ, என் ஆவியை உங்களுக்கு அருளுவேன் என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன். நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள் நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்துகொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆகடியம்பண்ணு வேன். நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போதும், ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும், நெருக்கமும் இடுக்கமும் உங்கள்மேல் வரும்போதும், ஆகடியம்பண்ணுவேன். அப்பொழுது அவர் கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள் நான் மறுஉத்தரவு கொடுக்க மாட்டேன் அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த் தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போனார்கள். என் ஆலோ

சனையை அவர்கள் விரும்பவில்லை. என் கடிந்துகொள்ளுதலை யெல்லாம் அசட்டைபண்ணினார்கள். ஆகையால் அவர்கள் தங்கள் வழி யின் பலனைப் புசிப்பார்கள் தங்கள் யோசனைகளினால் திருப்திய டைவார்கள். இப்படியான சூழ்நிலை எங்கள் வாழ்க்கையில் வருமுன் நாங்கள் தேவனிடத்திற்கு திரும்புவது எங்கள் ஆத்துமாவிற்கு நல்லது.

தாவீது ராஜா, இராட்சதனாகிய கோலியாத்தை மேற்கொண்ட போது, அவன் இளைஞனாக இருந்தான். தேவனுடைய அபிஷேகம் அவன் மேல் இருந்ததால், எதிரியின் பெலத்தை கண்டு அவன் அஞ்சவில்லை. ஏரேமியா, சாமுவேல் போன்றவர்களை தேவன் அவர்களுடைய சிறிய வயதிலேயே தனக்கென்று ஊழியம் செய்ய பிரித்தெடுத்தார். சிமியோன் என்னும் பேர் கொண்ட மனிதன், அவன் நீதியும் தேவபக்தியும் உள்ள வனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான் அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார். அவன் முதிர்வயதிலும் இயே சுவை காணும்படிக்கு காத்திருந்தான். அன்னாள் என்னும் ஒரு தீர்க் கதரிசி இருந்தாள் அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிரு ந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவால யத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள். (லூக்கா 2:25-38). எனவே நீங்கள் எந்த வயதுடையவர்களானாலும், உங்கள் இருதயத்தை கர்த்தருக்கு கொடுங்கள்.

நீதிமான் எந்த வயதுடையவனாக இருந்தாலும், அவனது உடல் எந்த நிலைமையில் இருந்தாலும். அவன் பனையைப்போல் செழித்து, லீப னோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான். அவன் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பான். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்ம லையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார் கள். (சங் 92:12-15)

ஆகவே, கடந்த காலத்தை குறித்து துக்கிக்காமல், விரயமாக்கப்பட்ட நாட்களை குறித்து மன வேதனையடையாமல், இன்றைய நாளை கர்த்தருக்கு ஒப்புவியுங்கள். இனி இருக்கும் நாட்கள், அவை சொற் பமாக இருந்தாலும், அநேகமாக இருந்தாலும் அவைகளை பிரயோஜ னப்படுத்திக் கொள்ளுங்கள். “நீ பயப்படாதே, நான் உன்னுடனே இரு க்கிறேன் திகையாதே, நான் உன் தேவன் நான் உன்னைப் பலப் படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்” என்று கர்த்தர் கூறியிருக்கின்றார்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

**பிரதான வசனம் :** சங்கீதம் 37:39-40

கர்த்தர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், நீங்கள் ஸ்தோத்திரத் தோடே கூடிய விண்ணப்பங்களை அவருக்குச் செலுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களை ஆண்டு கொள்ளும். உன் ஆபத்திலே என்னை நோக்கி கூப்பிடு, உன் இக்கட்டு நேரத்திலே என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுதலையாக்கு வேன் என்பது தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கின்றது. நாங்கள் கூப்பிடும் போது பதில் கொடுப்பதற்கு தேவன் தாமே சித்தமுள்ளவராயிருக்கின்றார்.

எந்தப் பக்கம் போவது என்று தெரியாதபடி தாங்கமுடியாத துன்பங்கள் மனிதர்களுடைய வாழ்க்கையிலே வருவதுண்டு. பாதை முடிந்ததைப் போன்றதான நிர்க்கதியான நிலையை தேவனுடைய பிள்ளைகள் எதிர் நோக்கும் போது, அவர்களுக்கு இரண்டு தெரிவுகள் உண்டு. “போகும் வழி எங்களுக்குத் தெரியும், நாங்கள் இந்த சூழ்நிலையை மேற்கொள்ளுவோம் என்று எங்கள் சொந்த அறிவு ஆற்றலின்படி செயற்படலாம்” அல்லது “எங்கள் தேவன் எங்களுக்கு உதவி செய்வார், அவராலே எங்களுக்கு விடுதலை உண்டாகும்” என்று எங்கள் கண்களை தேவனை நோக்கி ஏறெடுக்க முடியும்.

எங்கள் சொந்த பெலத்தில் நம்பியிருப்பது இந்த உலகத்தின் போக்காக இருக்கின்றது. நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும். இக்கட்டுக்காலத்தில் அவரே, அவர்கள் அடைக்கலம். கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவிப்பார் அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்.

ஒரு மனிதன் இந்த விடுதலையை பெற்றுக் கொள்ளும்படிக்கு அவன் என்ன செய்ய வேண்டும்? கர்த்தரை நம்பி நன்மை செய் தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

இந்த உலகத்தில் மனிதர்கள் பதிலுக்கு, பதில் செய்கின்றவர்களாக இருக்கின்றார்கள். நன்மையை எதிர்பார்த்து நன்மை செய்வார்கள். அதாவது, அவர் எனக்கு இப்படியாக செய்தார் எனவே நானும் அப்படியே செய்வேன். இந்த மனிதன் என் வாழ்வில் துன்பத்தை ஏற்படு

த்தினான், ஆகவே தருணம் கிடைக்கும் போது நானும் அப்படியே செய்வேன் என்று செயற்படுகின்றார்கள். இப்படிப்பட்ட மனநிலையோடு மனிதர்கள் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றார்கள். ஒரு மனிதன் செய்த தவறு ஒரு நாளில் முடிந்து விட்டாலும், அந்த தவறை மன்னித்து மறக்காமல், காலாகாலமாக தங்கள் இருதயத்தில் பதித்து வைத்துக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய பிரசன்னம் தங்கள் இருதயத்தில் காணப்படாதபடிக்கு வன்மம் தங்கள் இருதயத்தில் குடி கொள்ள இடங் கொடுக்கின்றார்கள்.

கர்த்தர் இருதயத்தைப் பார்க்கின்றவராக இருக்கின்றார். எங்கள் இருதயம் கர்த்தர் தங்கும் வாசஸ்தலமாக இருக்க வேண்டும். ஒரு வேளை மற்றவன் எனக்கு நன்மை செய்திருக்கலாம் அல்லது தீமை செய்திருக்கலாம் அல்லது அநியாயமான காரியங்களை செய்திருக்கலாம், அவன் என்ன செய்தான் என்பதைப் பார்த்து அதன் பிரகாரமாக செய்யாமல், நீ கர்த்தரை நம்பி அவனுக்கு நன்மை செய்.

இயேசு சொன்னார்: அன்றியும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி: நீ பகல்விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம் அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய் அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்.

கர்த்தரை நம்பி நன்மை செய்வது என்பது கைமாறு கருதி செய்யும் காரியமல்ல. மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியிலே இன்னுமொன்றை செய்வது கர்த்தருக்கு ஏற்புடையதல்ல. என்னுடைய உதவி கர்த்தரிடத்திலிருந்து வரும் என்று ஒருவன் மனதார நன்மைகளை நடப்பிக்கும் போது, அவன் தன் வாழ்வில் கர்த்தரை நம்பி நன்மை செய்கின்றவனாக இருக்கின்றான். அவன் தேசத்திலே குடியிருந்து, உலகத்தார் மத்தியிலே வாழ்ந்தாலும், அவர்களுடைய கலச்சாரங்களால் தன்னை கறைப்படுத்தாதபடி, உலகத்தார் மத்தியிலே சத்தியத்தின் வழியில் நடந்து சாட்சியாக இருக்கின்றான். வாழ்விலே என்ன நெருக்கம் வந்தாலும், என்னதான் நடந்தாலும், எந்த முறுமுறுப்பில்லாமல் கர்த்தருக்குள் மன மகிழ்சியாக இருக்கின்றான். அவன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து காட்டிய வழியிலே வாழ்கின்றான். அவனுடைய இரட்சிப்பு கர்த்தராலே வரும்.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]**

# ஞானத்தை வரவழையுங்கள்

ஒரு குறிப்பிட்ட ஒன்றுகூடலிலே சில நண்பர்கள் அமர்ந்திருந்து, தங்கள் பாடசாலை நாட்களின் சுவாரசியமான சம்பவங்களை பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த வேளையிலே தாங்கள் 10ம் வகுப்பில் படிக்கும் போது தங்களுக்கு ஆசிரியராக இருந்தவரைக் கண்டதும் திடீரென யாவரும் மௌனமானார்கள். தங்கள் இருக்கையில் இருந்து எழுந்து மிகவும் பணிவுடன், ஆசிரியரை கனத்துடன் வாழ்த்தினார்கள். சுமார் 30 ஆண்டுகள் கடந்துவிட்டது. அந்த நண்பர்கள் யாவரும் திருமணமாகி அவர்களுடைய பிள்ளைகள் இப்போது பாடசாலைக்கு செல்கின்றார்கள். ஒன்றுகூடலிலே அவர்கள் ஒழுக்கமாக யோக்கியமான சம்பவங்களையே பேசிக் கொண்டிருந்தார்கள். அப்படியானால் அந்த வயதான, தங்கள் பழைய ஆசிரியரைக் கண்டதும் ஏன் மௌனமானார்கள்? அதுவே அவர்கள் தங்கள் குருவுக்கு கொடுக்கும் கனம். இந்த கனமானது, ஆசிரியர் ஏதாவது செய்துவிடுவார் என்று மனத் திகிலினால் உண்டான கனம் அல்ல. தங்கள் ஆசிரியரை குறித்த பயபக்தியாகும். அதற்கொத்ததாகவே, அவர் என்னை அடித்துப் போடுவார். அவர் என்னை சபித்துப் போடுவார் என தேவனைக் கண்டு நடுநடுங்குவது, தேவ பயம் அல்ல. எங்கள் இயேசு அன்பு நிறைந்தவர்! நாங்கள் வாழும்படிக்காய் தம்மைத் தாமே பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தவர். எனவே அங்கே திகிலுக்கு இடமில்லை. பயபக்தியோடு, தேவனுக்கு நாங்கள் கொடுக்கும் கனமே ஞானத்தின் ஆரம்பம். ஒருவேளை இந்த உலகிலே நாங்கள் மனிதர்களைக் கண்டு முகஸ்துதி செய்யலாம், அதாவது, மனதார நன்றியறிதலுள்ளவர்களாயிராமல், வெளியிலே எங்கள் நன்றியை காண்பிக்கலாம். ஆனால், எங்கள் தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. எங்கள் இருதயத்தில் என்ன இருக்கின்றது என அவர் ஆராய்ந்து அறிகின்றார். "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." (ஏசாயா 29:13) என கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு கூறினார். எனவே, மனதார தேவனுக்கு பயப்படுகின்றவன் தனக்குள்ளே தெய்வீக ஞானத்தை வரவழைக்கின்றான். இந்த தெய்வீக ஞானத்தினாலே எங்கள் வாழ்க்கையில் அநேக நன்மைகள் உண்டாகின்றது.

**நீதிமொழிகள் 9:10**

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உமக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. உம்மை மனதார பயபக்தியுடன் ஆராதிக்க உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வெற்றி வாழ்க்கையின் வழி

கர்த்தரை பயபக்தியுடன் ஆராதிக்கின்றவன் அவரை மனதார அன்பு செய்கின்றான். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாகும் அவருடைய கற்பனைகள் பாரமான வைகளுமல்ல. (1 யோவான் 5:3). அவருடைய கட்டளைகளின் வழியிலே நிறைவான சமாதானமுள்ள வாழ்வு உண்டு. "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. அதாவது, இந்த பூமியிலே எங்களை நோக்கி வரும் சவால்கள் அதிகம். கர்த்தருடைய வார்த்தையை கேட்டு அதன்படி தன் வாழ்வை அமைத்துக் கொள்ளுகிறவனை, எந்த பயங்கரங்களும் வெற்றி கொள்ள முடியாது. ஏனெனில் அவன் கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் கட்டப் பட்டிருக்கின்றான். அப்படி அவருடைய கட்டளைகளை கேளாதவன், சவால்கள் வாழ்க்கையை நோக்கி வரும் போது, முற்றாக தன் வாழ்க்கையை அழித்துப் போடுகின்றான். ஒரு ஆசிரியர் கற்றுக் கொடுப்பதை கவனமாகக் கேட்டு, அதன்படி செய்கின்ற மாணவர்களே பரீட்சை நாளில் எந்த தயக்கமுமின்றி முகங் கொடுத்து, அதிலே சிறந்த புள்ளிகளை பெற்றுக் கொள்கின்றார்கள். இது பெரிதான இரகசியமில்லை. இது வெளிப்படையான உண்மை. கர்த்தர் தமது கட்டளைகளையும், பிரமாணங்களையும் கருத்தாய் கைகொள்ளும்படி கற்றுத் தருகின்றார். அதுமட்டுமல்ல, சோதனையின் நாளை மேற்கொள்ளும்படிக்கு எங்களோடு இருந்து எங்களுக்கு துணை செய்யும்படிக்கு தூய ஆவியானவரை எங்களுக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார். எனவே ஞானமுள்ள மனிதன் கர்த்தருக்கு பயப்படுவதால், அவரை நேசித்து அவர் கட்டளைகளை தன் இருதயத்தில் பதித்து வைக்கின்றான்.

**உபாகமம் 6:24**

இந்நாளில் இருக்கிறதுபோல,நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும்,நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின்படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டார்.

**ஜெபம்**: எங்களை வழிநடத்தும் தேவனே, இந்த உலகிலே வெற்றி வாழ்க்கை வாழும்படிக்கு உம்முடைய கட்டளைகளின் வழியிலே நான் நடக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | கார்திகை 3 | 📖 மாலை வாசகம் – தானியேல் 4:29–37

# கர்த்தருடைய பாதுகாப்பு

> **சங்கீதம் 34:7**
>
> **கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.**

ஒரு தேசத்தை அந்நிய நாட்டின் படைகள் முற்றுகை போட்டிருந்ததால், கடல், வான், தரை சார்ந்த போக்குவரத்து ஸ்தம்பிதமானது. இதனால் அந்நாட்டின் வியாபாரங்கள் நஷ்டப்பட ஆரம்பித்தது. விவசாயம் செய்வதற்கு வயல்களுக்கு செல்லமுடியவில்லை. மீன்பிடிக்கின்றவர்கள் கடலுக்கு செல்வது படிப்படியாக குறைய ஆரம்பித்து, பண்ணைகளிலே மிருக ஜீவன்கள் அழிந்து கொண்டே போயிற்று. வைத்திய சாலைகள் இயங்குவதற்கு வேண்டிய மருந்துப் பொருட்களும், உபகரணங்களும் வருவது தடை செய்யப்பட்டாயிற்று, மின்சார வசதிகளும் துண்டிக்கப்பட்டாயிற்று. தேசத்தின் அதிகாரிகளும், திரளான செல்வம் உள்ளவர்களும், செல்வாக்கு நிறைந்தவர்களும், கொள்வனவு செய்ய முடியாத நாட்களும், தங்கள் வீடுகளிலே பாதுகாப்போடு இருக்க முடியாத நாட்களுமாயிருந்தது. ஆம் பிரியமானவர்களே, எந்த ஒரு தேசத்தின் தலைவனுக்கும் ஏனைய தேசங்களைவிட படைப்பலம் மிகுதியாக இருக்கலாம் ஆனாலும் யுத்த நாளிலே அவைகள் அவனை இரட்சிக்கமாட்டாது. உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் பராக்கிரமமுள்ள மனிதர்கள் தேசத்திலே இருக்கலாம், ஆனால் அவர்கள் பெலன் ஆபத்து நாளிலே அவர்களை விடுவிக்க மாட்டாது. எங்களுக்கு திரண்ட ஆஸ்தி இருக்கலாம், நாங்கள் பெரிதான கல்விமான்களாக இருக்கலாம், சமுகத்தால் புகழப்படும் பெரிதான அந்தஸ்து எமக்கு இருக்கலாம். ஆனால் இவையொன்றும் ஆபத்து நாட்களில் மனிதர்களுக்கு உதவுவதில்லை. கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும், பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கின்ற மனுஷனை கர்த்தருடைய தூதன் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். எனவே கர்த்தருக்கு பயந்து நடக்கின்றவனே மெய் ஞானமுடைய மனுஷனாயிருக்கின்றான்.

**ஜெபம்**: பரலோக தந்தையே, இந்த உலகிலே சிறந்தவைகள் என்று கருதப்படும் காரியங்களில் என் கண்களை பதிய வைக்காமல், உம்முடைய பாதுகாப்புக்குள் நான் வாழ என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீடித்த நாட்கள்

சுபீட்சம் நிறைந்த பரந்த வல்லரசு தேசம் ஒன்றிலிருந்து, தூரத்திலுள்ள அபிவிருத்தி அடைந்து வரும் சிறிய தேசமொன்றிற்கு, தன் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதராக ஒரு அரச உத்தியோகஸ்த்தரை அந்த தேசத்தின் தலைவர் அனுப்பி வைத்தார். அந்த தூர தேசத்திலே, நாளாந்த வாழ்க்கை மிகவும் சவால் நிறைந்ததாயும். எப்போதும் குழப்பங்களும் ஆபத்துக்களும் இருந்தும் வந்தது. தன் தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அந்த உத்தியோகஸ்த்தர், குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்கு அங்கே இருப்பார் என யாவரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், அந்த சிறிய தேசத்திலே ஏற்பட்ட உள்நாட்டு கலவரங்களால், அந்த உத்தியோகஸ்த்தர், முன் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் மீண்டும் தன் தாய்நாட்டிற்கு வரவழைக்கப்பட்டார். அந்நிய தேசத்தில் இருக்கும்வரை அவர் தன் தாய் நாட்டிற்கு சிறந்த ஊழியராக இருந்தார். தன் பணியை முடித்து திரும்பிய போது, தன் சுபீட்சம் நிறைந்த தன் சொந்த தேசத்திலே குடிமகனாக சுகித்திருந்தார். அதுபோலவே, பரம தேசமாகிய எங்கள் சொந்த தேசமாகிய பரலோகத்தை நோக்கியிருக்கும் எங்களுக்கு இந்த பூமி தற்காலிகமானது. தேவனுக்குப் பயந்து, அவருடைய வழியிலே தங்கள் வாழ்க்கையை வாழ்ந்த எங்களில் பலர், தங்கள் இளவயதிலேயே இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றிருக்கின்றார்கள். சிலர் இயேசுவின் நற்செய்திக்காக இரத்தசாட்சிகளாக தங்கள் உயிரை தியாகம் செய்தார்கள். வேறுசிலர் எதிர்பாராத நோய்களாலும் விபத்துக்களாலும் மரித்திருக்கின்றார்கள். இங்கு இருக்கும்வரை அவர்கள் தங்களுடைய எஜமானாகிய இயேசுவின் பணியை செய்து வந்தார்கள். அவர்கள் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும் போது, அவரோடு என்றும் நித்தியமாய் நிலைத்திருப்பார்கள். அவருக்கு பயந்து, அவருடைய வழியில் நடப்பவர்கள், எங்கிருந்தாலும், அவரோடே இருப்பார்கள். பிரிவுகள் துயரமானது. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இந்த உலகின் பாடுகள் தற்காலத்தில் வேதனையாக தோன்றினாலும், மகிமையிலே அவரை தரிசிக்கும் நாள் இன்பமானது. ஒரு விசுவாசியின் வாழ்வு இந்த உலக மரணத்துடன் முடிந்து போவதில்லை.

**சங்கீதம் 23:6**

**நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.**

**ஜெபம்**: நித்தியமான தேவனே, இந்த உலகிலே என்னதான் நடந்தாலும், மகிமையிலே உம்மைத் தரிசிக்கும் நாள் வரைக்கும், உமக்கு பயந்து நீர் கற்பித்த வழியிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருக்குக் காத்திருங்கள்

யுத்த நாட்களாக இருந்தபடியால், ஒரு கிராமத்திலுள்ள ஜனங்கள், குறிப்பிட்ட இராத்திரியிலே, அருகிலுள்ள கிராமத்திற்குச் செல்லும்படியாக அரச அதிகாரிகளினால் பணிக்கப்பட்டார்கள். இருள் சூழ்ந்த வேளை, கரடுமுரடான பாதை, வனவிலங்குகள், ஊரும் பிராணிகளினால் தொல்லைகள் உண்டு, இப்படியான வேளையிலே, அந்த ஜனங்களை வழிநடத்திச் செல்லும்படி, மதுபான வெறியினால் மதிமயங்கி இருக்கும் மனிதனை அனுமதிக்க முடியுமோ? முடியாது. ஏனெனில் அந்த மனிதனால் நிதானமாக சிந்தித்து செயலாற்ற முடியாது. மதி மயங்கி இருக்கும் வேளையிலே மனிதனாலே, தன் சொந்த வாழ்க்கையில் கூட சரியான முடிவுகள் எதையும் எடுக்க முடியாது. சில வேளைகளிலே, எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் பெலவீனங்கள் தலை தூக்கும் போது, நாங்கள் மதிமயங்கிப் போகும் நிலைகள் உண்டாகலாம். தேவனுடைய வார்த்தை கூறும் காரியங்களை நாங்கள் செய்யத் தவறும் போது பெலவீனங்கள் எங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றது. உதாரணமாக, ஒருவருடைய மனதிலே கசப்பு உருவாகும் போது, அதை வேத வார்த்தையின்படி மேற்கொள்ள வேண்டும். அதவாது, நீங்கள் உன்னதமானவருக்கு பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்றால், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்" என்று வேதம் திட்டமாக கூறியிருக்க, ஒரு மனிதன் தன் நிலையை நியாயப்படுத்தும் போது, அவன் தேவனுடைய வார்த்தையை அற்பமாக எண்ணுகின்றான். இப்படியாக பல வழிகளில் பெலவீனங்கள் எங்கள் வாழ்க்கையை சூழ்ந்து விடுகின்றது. இப்படியான நிலையிலே மனிதர்கள் தீவிரமாக ஒன்றன் பின் ஒன்றாக பல பிழையான தீர்மானங்களை தங்கள் வாழ்வில் எடுத்து விடுகின்றார்கள். எனவே, பெலவீனங்களும் நெருக்கங்களும் உங்கள் வாழ்வை அழுத்தும் வேளைகளிலே, நீங்கள் எடுக்க வேண்டிய முக்கிய தீர்மானங்களை குறித்து மிகவும் அவதானமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருக்காகக் காத்திருக்க பழகிக் கொள்ள வேண்டும்.

**ஏசாயா 40:31**

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, என் இரட்சிப்புமானவரே, என்னுடைய வாழ்க்கையில் பெலவீனங்கள் தலைதூக்கும் போது, நான் பின்னிட்டு, உம் வார்த்தைகளை அற்பமாக எண்ணாதபடிக்கு என்னைக் காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் நிலையை அறிய வேண்டும்.

மனிதர்களுடைய வாழ்க்கையிலே, அவர்கள் சரியான தீர்மானங்களை எடுக்க முடியாமல் அவர்களை தடை செய்யக்கூடிய சில பெலவீனங் களை ஆராய்ந்து பார்ப்போம். மதுபானத்தின் வெறியினால் மனித ர்கள் மதிமயங்கிப் போய்விடுவதுண்டு. மதுபானம் மட்டுமல்ல, இன் னும் அநேக பழக்கங்கள், மனிதர்களை நிதானமாக சிந்திக்காதபடிக்கு மதிமயங்கச் செய்து விடுகின்றது. மூர்க்க வெறி கொள்ளும் மனிதர்கள், தங் களுக்கு ஏற்படும் கடும் கோபத்தில் செயல்ப்படும் போது, வாக்குவாதங்க ளும், தவறான பாஷைகளும், சண் டைகளும், பிரிவினைகளும், ஏன் சில வேளைகளிலே கொலைகளுக்கும் மனி தர்களை உள்ளாக்கிவிடுகின்றது. உலக ஆசைகளால் உண்டாகும் மதிமயக்கம் தேவனுடைய வார்த்தை எங் களில் நிலை கொள்ளாதபடிக்கு நெருக்கிப் போடுகின்றது. குறிப்பாக பண ஆசை எல்லா தீமைக்கும் வேராக இருக்கின்றது. எந்த நிலை யிலும் மனிதர்கள் எடுக்கும் தீர்மானங்கள் இந்த உலக பொக்கிஷம் சார்ந்ததாகவே இருக்கும். மோக பாவத்தினால் உண்டாகும் பெலவீனம், மனிதர்களை பல கேடான வழிக்கு இட்டுச் செல்கின்றது. இதனால் மனிதர்கள் தேவன் தங்கும் ஆலயமாகிய தங்கள் சரீரங்களை கெடு த்து, தங்கள் இருதயங்களை இருளடையச் செய்துவிடுகின்றார்கள். கல்வி மற்றும் சமுதாய அந்தஸ்தினால் உண்டாகும் பெருமை, மனி தர்கள் உள்ளத்திலே, தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என் னும் எண்ணத்தை தூண்டிவிடுகின்றது. இதனால் மனிதர்கள் தேவ கிரு பையை இழந்து போய்விடுகின்றார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையை அளிக்கின்றார். விக்கிரக ஆராதனையானது மனிதர்களை தேவனை விட்டு பிரித்து விடுகின்றது. தேவ பிள்ளைகள் தாங்கள் விட்டு வந்த விக் கிரகங்களை ஆராதனை செய்யாவிடினும், அந்த ஆராதனையை செய் கின்றவர்களின் வைபவங்களிலே கலந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவு அளிக்கின்றார்கள். இப்படியாக பலவிதமான பெலவீனங்கள் எங் கள் பரிசுத்த வாழ்க்கையை சமரசம் செய்யலாம். முதற்படியாக என் நிலை என்ன என்பதை நான் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். பின்பு இவைகளை எங்களை விட்டு அகற்றிவிடும்படிக்கு, பரலோகத்தி ற்குரிய மேலான பொக்கிஷங்களை நாடித் தேட வேண்டும்.

**கொலோசெயர் 3:2**

பூமியிலுள்ளவைகளையல்ல,மேலானவைகளையே நாடுங்கள்.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, முதலாவதாக, என்னிடத்திலிருக்கும் என் பெலவீனங்களை நான் உணர்ந்து, அதை விட்டு மனந்திரும்பும்ப டியான உணர்வுள்ள தாழ்மையுள்ள இருதயத்தை எனக்குத் தந்தருள்வீ ராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழிகளை ஆராய்ந்து அறியுங்கள்

தேவனுடைய வார்த்தையை மையமாக வைத்து ஒரு காரியத்தை ஒருவன் ஆராய்ந்து பார்ப்பதற்கு இடங் கொடாமல், தன்னுடைய உணர்வுகளின்படி முடிவுகளை எடுக்கும்படி, அவன் மனதிலே உந்துதல் வரும் போது, அவனுடைய வாழ்க்கையில் பெலவீனம் தலை தூக்கி விட்டது என்பது பொருள். அப்போது அவனுடைய வழிகள் யாவும் அவனுக்கு சரியானதாகவே தெரியும். அந்த வழிகளில் கண்ணிகள் உண்டு. அந்த வழிகளின் முடிவும் அழிவு. எங்கள் பெலவீன நேரங்களில் நாங்கள் எடுக்கக்கூடிய சில தவறான தீர்மானங்கள் எவை என்பதை இன்று பார்ப்போம். இளம் பிரயாத்திலே வாலிபர்கள் தங்கள் திருமணத்தைக் குறித்து எடுக்கும் முடிவு. வாலிபத்தின் பாவ இச்சைகள் எது என்பதை உணர்ந்து கொள்ளாமல், தாங்கள் யாருடன் வாழப்போகின்றோம் என்பதை தங்கள் பெலவீன நேரங்களில் அதிகமானவர்கள் நிச்சயிக்கின்றார்கள். அது மட்டுமல்ல, தேவனுக்குப் பயந்து, தேவ வழியிலே நடக்கும் துணையை தங்கள் பிள்ளைகளுக்குத் தேடிக் கொள்ளாமல், கல்வி, குடும்ப அந்தஸ்து, பணம் இவைகளை மையமாக வைத்து பெற்றோர் திருமணங்களை தங்கள் பிள்ளைகளுக்கு செய்து வைக்கின்றார்கள். மற்றும் வேலை செய்யும் இடத்திலே, பொறுமையைக் காத்துக் கொள்ளாமல், கோபமடைந்து, சக ஊழியர்களுடனும், மேற்பார்வையாளருடனும் வாக்குவாதங்கள் செய்து, முன்பின் யோசிக்காமல் வேலையை விட்டு வெளியேறுதல். அயலவரோடு ஒத்து போகமுடியவில்லை. என்னுடைய சுபாவங்களை எனக்கு மாற்றமுடியாது ஆகவே வீட்டை விற்றுவிட்டு இன்னுமொரு ஊருக்கு போவோம். பாடசாலையிலே பிள்ளைக்கு ஆசிரியர்கள் ஒரே கரைச்சல், என் பிள்ளையை திருத்த மனதில்லை, எனவே பாடசாலையை மாற்றிவிடுவோம். இப்படியாக இந்த நாட்களிலே, வேதம் என்ன கூறுகின்றது என்று சற்று ஆராய்ந்து பார்க்க மனதில்லாமல், சபை ஐக்கியங்களை இலகுவாக மாற்றிவிடுகின்றார்கள். மேற்கூறப்பட்ட உதாரணங்களைப் போன்ற சம்பவங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் போது, தீவிரமாக முடிவுகளை எடுக்காதிருங்கள். அவ் வேளைகளிலே உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளுக்கு இடங் கொடுக்காமல் தேவனுடைய பாதத்திலே அமர்ந்திருங்கள்.

**ஏசாயா 55:8**

என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, பெலவீன நேரங்களிலே என் உள்ளத்தின் உணர்வுகளின்படி தீவிரமாக தவறான தீர்மானங்களை எடுக்காமல், என் சொந்த வழிகளில் செல்லாதபடி என்னைக் காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | கார்திகை 8 | 📖 மாலை வாசகம் – ஏசாயா 55:28 – 31

# உன் இருதயம் ஸ்திரப்படும்.

என்னுடைய பெலன் இருக்கும் வரை ஓடினேன். இப்பொழுது எப்பக்கமும் நெருக்கப்பட்டு வலுவிழந்து போனேன். இனி என்னால் ஒன்றும் செய்ய முடியாது. வாழ்க்கையில் இளைப்படைந்து போனேன் என்று ஒரு மனிதன் நம்பிக்கையிழந்தவனாய் தன் நிலைமையை எடுத்துக் கூறினான். இப்படியான பெலவீனமான நிலைகள் வேதத்திலே காணப்படும் பல பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலும் ஏற்பட்டது. யோபு என்ற பக்தன் யாவற்றையும் இழந்து உருக்குலைந்த நிலையிலிருந்தான். மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது. துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது. மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது என்று தாவீது ராஜா பாடினார். நான் ஒருவன் தான் மிஞ்சியிருக்கின்றேன் என்று எலியா தேவனிடம் முறையிட்டார். கர்த்தராகிய இயேசுவோடு இருந்த பேதுரு, ஒரு இராத்திரியிலே தான் நேசித்த இயேசுவை தெரியாது என்று மூன்று முறை மறுதலித்தார். வாழ் க்கையில் எல்லாம் முடிந்து விட்டது போன்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டிருந்தார். ஆனால் இவர்கள் யாவரும் தங்கள் பெலவீன நேரத்திலே தங்களைத் தாழத்தி தேவனிடம் ஒப்புக் கொடுத்தார்கள். இவர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய ஆரம்பம் உண்டானது. அது போலவே, எங்களுடைய வாழ்க்கையிலும் பெலவீனங்கள் சூழந்து கொள்ளும் போது, தேவனுக்காக காத்திருக்க வேண்டும். “பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை. இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.” கர்த்தராலே எங்கள் இருதயம் ஸ்திரப்படும்.

**சங்கீதம் 27:14**

**கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.**

**ஜெபம்**: என் பெலவீனங்களை அறிந்த தேவனே, வேதத்திலுள்ள பரிசுத்தவான்களைப் போல, நானும் என்னைத் தாழ்த்தி, ஒரு புதிய ஆரம்பத்திற்காக காத்திருக்கும் பொறுமையைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பந்தய பொருளை நோக்கி

கல்வி கற்பதிலே ஆர்வமுள்ள மாணவன், ஆரம்ப வகுப்புகளிலே, எப்போதும் பாடசாலையில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்களை கவனமாகப் படித்து, பரீட்சைகளிலே சிறந்த புள்ளிகளை எடுத்து வந்தான், சில ஆண்டுகள் கடந்து சென்ற வேளையிலே, தன்னைத் சூழ உள்ள சில மாணவர்கள் எப்போதும் அநீதியான செயல்களிலே ஈடுபடுவதைக் கண்டான். பரீட்சை நேரங்களில் கூட சில மாணவர்கள், நீதியற்ற காரியங்களை செய்து, புள்ளிகளை பெற்றுக் கொள்ளுவதை அவதானித்தான். நான் முறையாக படித்து புள்ளிகளை எடுக்கின்றேனே, இவர்கள் இலகுவாக புள்ளிகளை எடுக்கின்றார்களே, என்று தன் கண்களை அவர்கள் மேல் பதிய வைத்தான். அவர்கள் குறைகளை மேலிடத்திற்கு அறிவிக்க வேண்டும், அநீதிகளை தடுக்க வேண்டும் என்று பல முயற்சிகளை எடுத்து வந்தான். அவன் எவ்வளவு முயற்சி செய்தாலும், அநீதியான செயல்முறைகள் அதிகரித்துக் கொண்டே போயிற்று. ஆனால் நன்றாக படித்தவனுடைய புள்ளிகள் குறைய ஆரம்பித்துவிட்டது. பிரியமானவர்களே, இதற்கொத்ததாகவே, இந்த உலகத்தில் அநீதி மலிந்து கொண்டு போவது உண்மை. அநீதியை ஒழிப்பதற்கல்ல, முதலாவதாக எங்கள் வாழ்வில் தேவனுடைய நீதியை நிறைவேற்ற பிரயாசப்பட வேண்டும். அதன் பொருட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளை எங்கள் வாழ்வில் பெருகச் செய்ய வேண்டும். அப்படியானால், அவைகளை ஒழிப்பதற்கு நாங்கள் பிரயாசப்படக் கூடாதா? பிரயாசப்படலாம் ஆனால் எங்கள் வாழ்க்கையில் நீதியை நடப்பிக்க கொடுக்கப்பட்ட நேரங்களை, மற்றவர்களுடைய வாழ்க்கையிலுள்ள அநீதியை ஒழிப்பதற்கு கொடுக்கப்படலாகாது. எங்களுடைய இலக்கு பரலோகம்! எங்களுடைய சொந்த பெலத்தால் நாங்கள் அங்கு செல்ல முடியாது. எனவே எங்கள் கண்கள் எப்போதும் கர்த்தராகிய இயேசுவின் மேல் இருக்க வேண்டும். அதை திசை திருப்பி வேறுகாரியங்களிலே எங்கள் கண்களை பதிய வைக்க வேண்டும் என்பதே எதிராளியானவனின் பெரிதான சதித்திட்டம். எனவே, நாங்கள் எங்கள் கண்களை பரம அழைப்பின் பந்தயப் பொருளின் மேல் வைப்போம்.

**பிலிப்பியர் 3:14**

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித்தொடருகிறேன்**

**ஜெபம்**: என்னை அழைத்த தேவனே, உம்முடைய மகத்துவமான அழைப்பை நான் காத்துக் கொள்ளும்படிக்கு, எந்நேரமும் பரலோகமாகிய இலக்கை மறந்து போகாதபடி இருக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

இன்றைய வசனத்திலே நாங்கள் பிசாசானவனோடு எதிர்த்து நிற்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது அப்படியானால் நாங்கள் எப்படி பிசாசானவனோடு எதிர்த்து நிற்பது? எப்படி ஒரு அநீதி நிறைந்தவனோடு எதிர்த்துப் போராடுவது? இந்த உலகிலே அது மிகவும் கடினமான செயல். உங்கள் வீட்டின் அறையொன்று இருளாக இருக்கின்றது, எப்படி அந்த இருளை அங்கிருந்து அகற்ற முடியும்? நாங்கள் அங்கு விளக்கேற்றுவதால் அல்லவோ! ஆம், ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? ஒளி இருக்கும் இடத்தில் இருள் மேற்கொள்ள முடியாது. எனவே, நாங்கள் செய்ய வேண்டிய காரியம் கர்த்தராகிய இயேசுவின் பேரொளியை எங்களில் வீசச் செய்ய வேண்டும். "எழும்பிப் பிரகாசி உன் ஒளிவந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும் ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார் அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள்." (ஏசாயா 60:1-3) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இதற்கொத்ததாகவே, நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியும்போது, பிசாசானவனை எதிர்த்து மேற்கொள்கின்றவர்களாக இருக்கின்றோம். முதற்படியாக, மற்றவர்களுடைய வாழ்க்கையிலே அல்ல அவரவர் தங்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் இதை நடப்பிக்க வேண்டும். ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாள், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், பிசாசானவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவன் கூறியதை செய்ததால், பிசாசானவனினால் மேற்கொள்ளப்பட்டார்கள். நாங்கள் மாம்சத்திலே போராடுகிறவர்கள் அல்ல. அதாவது, ஒருவன் அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டு, பயங்கரமான தீய செயல்களை செய்கின்றவனாக இருந்தால், அவனை கட்டி வைத்து அடித்து மிரட்டுவது எங்கள் தேவனுக்கேற்ப கிரியையல்ல.இயேசுவின் நாமத்தினாலே,அந்த அசுத்த ஆவியை நாம் மேற்கொள்ளுகின்றவர்களாக இருக்க வேண்டும். இப்படியாகவே நாங்கள் பிசாசானவனை எதிர்த்துப் போராடுகின்றோம்.

**யாக்கோபு 4:7**

**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப் போவான்.**

**ஜெபம்**: சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுடைய போராட்டம் மாம்சத்திற்குரியதல்ல என்பதை நாங்கள் எப்போதும் உணர்ந்தவர்களாக, உம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருக்க எங்களை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**திங்கள் | கார்திகை 11** | 📖 மாலை வாசகம் – 2 கொரி 10:4

# வெற்றி வாழ்க்கையின் வழி

பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, நாங்கள் அணிந்து கொள்ள வேண்டிய போராயுதங்களை தேவன் எங்களுக்கு கொடுத்திருக்கின்றார். எனவே தேவனுக்கு கீழ்ப்படிந்து அந்த சர்வாயுதவர்க்கத்தை நாங்கள் தரித்துக் கொள்ள வேண்டும். இந்தப் போராயுதங்கள், இந்த உலகத்திலே காணப்படும் வெளியரங்கமானதாயுள்ள போராயுதங்கள் அல்ல. அவை உள்ளான மனிதனுக்குரியவைகள். அவை சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சிப்பு, தேவ வசனம் என்பவைகளே. **சத்தியம்** என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், **சமாதானத்தின்** சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக **விசுவாசமென்னும்** கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். **இரட்சணியமென்னும்** தலைச்சீராவையும், **தேவ வசனமாகிய** ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சிப்பு, தேவ வசனம் இவைகளை நாம் அறிந்து வளர்ந்து இன்னுமாய் பெருகும்படிக்கு பரிசுத்த வேதாகமத்தை தினமும் தியானிக்க வேண்டும். அத்துடன் அனுதினமும் ஜெபத்திலே தரித்திருக்க வேண்டும். தீங்குநாளிலே பிசாசின் தந்திரங்களை எதிர்த்து நிற்க இவை யாவும் எங்களை திராணியுள்ளவர்களாக்கும். இது தேவனுடைய வார்த்தை, அந்த வார்த்தைக்கு நாங்கள் கீழ்ப்படியும் போது, எங்கள் உள்ளான மனிதன் தேவ சாயலை அடையாதபடிக்கு, பிசாசானவனின் தந்திரமான காரியங்களை, நாங்கள் உணர்ந்து கொள்ளும்படிக்கு, பிரகாசமுள்ள மனக் கண்களை உடையவர்களாக இருப்போம். இவ்வண்ணமாக போராயுதங்களை தரித்துக் கொண்டவர்களாக கர்த்தரிலும், அவருடைய திவ்விய வல்லமையிலும் பெலப்படுவோம்.

**எபேசியர் 6:10**

**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, இந்த உலகிலே வெற்றியுள்ள வாழ்க்கை வாழும்படியாய், நான் தினமும் வேதத்தை தியானித்து, ஆவியிலே ஜெபம் செய்யும்படிக்கு என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பட்சபாதம் இல்லாத தேவன்

ஒரு தொழிற்சாலையிலே பலமட்டங்களிலே வேலை பார்த்து வரும் தொழி நுட்ப வல்லுனர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் போன்ற பலதரப்பட்ட தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் இருந்தார்கள். அதே வேளை யிலே, உதவிக்காக அமர்த்தப்பட்ட சில எளிமையான ஊழியர்களும் இரு ந்தார்கள். ஆனால், அங்கிருந்த இயக்குனர்களில் ஒருவர், தேர்ச்சி பெற்ற ஊழியர்களோடு பேசும் முறையானது, எளிமையும் சிறுமையு மான ஊழியர்களுடன் பேசும் முறையி லிருந்து வேறு பட்டிருந்தது. அந்த இய க்குனரின் பார்வையிலே உதவிக்காக அமர்த்தப்பட்ட ஊழியர்கள் அற்பமாக தோன்றினார்கள். அவர்கள் பொருந்தின சம்பளத்திற்கு மிஞ்சின வேலைகளைப் பார்த்தாலும், அவர்களோடு பேசும் போது கடுமையான தொனியுடன் பேசிக் கொள்வார். ஏனெனில் அநேக மனிதர் களுடைய பார்வையிலே பட்சபாதம் உண்டு. தேவனுடைய பார்வையிலே பட்சபாதம் இல்லை. உலக ஆஸ்தி, கல்வி, அந்தஸ்து போன்றவை கள் இந்த உலகத்திற்குரியவைகள். அவைகள் ஒருவனுக்கு இருந்தா லும் இல்லாவிட்டாலும் அவன் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை, தன்னுடைய வாழ்வில் நிறைவேற்றுபவனாக இருந்தால், அவனைப் பார்த்து உத்தம ஊழியன் என்று அழைப்பார். ஒரு வேளை எங்க ளுக்கு கொடுக்கப்பட்ட வேலை சிறியதாக இருக்கலாம், மனிதர் களுடைய பார்வையிலே அற்பமாக எண்ணப்படலாம். எங்கள் பெலன் குறைவுள்ளதாக இருக்கலாம். எது எப்படியாக இருந்தாலும், கர்த்தரு டைய கணக்கிலிருந்து ஒருவரும் எங்களைப் பிரிக்க முடியாது. பிரிய மானவர்களே, இன்று நீங்கள் அற்பமாக எண்ணப்பட்டால் கவலை யடையாதிருங்கள். கர்த்தருடைய பார்வையிலே நீங்கள் விலையேற ப்பட்டவர்கள். உங்களது தாழ்மையுள்ள சிந்தையை விட்டுவிடாதிருங் கள். நீங்கள் கண்ணியமாகச் செய்யும் நற்கிரியைகளையும் விட்டு விடாதிருங்கள். ஒரு வேளை நாங்கள் மற்றவர்களை பட்சபாதத்தோடு நடத்து கின்றவர்களாக இருந்தால், அதை உடனடியாக விட்டு விட வேண் டும். எங்களுடைய கர்த்தரைப் போல நாங்களும், அவர்களை ஆதரி க்கின்றவர்களாக இரு க்க வேண்டும்.

**யோபு 36:15**

சிறுமைப்பட்டவர்களை அவர் சிறுமைக்கு நீங்க லாக்கி, அவர்கள் ஒடுக்க ப்பட்டிருக்கையில் அவர் கள் செவியைத் திறக்கி றார்.

**ஜெபம்**: இரக்கம் நிறைந்த தேவனே, நீர் மனிதர் பார்க்கின்ற பிரகாரமாக பார்க்கின்றவர் அல்ல. உம்மைப் போல நானும் சிறுமைப்பட்ட ஜனங் களை ஆதரிக்கின்றவனா(ளா)க இருக்க என்னை வழிநடத்தும். இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீங்கள் அருமையானவர்கள்

உனக்கு பிரதியீடாக நான் பலரை வேலைக்கு அமர்த்த முடியும், அது ஒரு கடினமாக செயல் அல்ல. உன்னுடைய தகமைக்கொத்த ஆயிர க்கணக்கானோர் ஊரிலே இருக்கின்றார்கள் (you are not indispensable) என ஒரு காரியாலய உரிமையாளர் தன்னுடைய ஊழியர்களில் ஒருவரு க்கு கூறினார். இன்னுமொரு விதமாக சொல்லப்போனால் உன்னிலே ஒரு விசேஷமும் இல்லை என்று அது பொருள்படும்.அந்த உரிமை யாளரின் கண்களிலே குறிப்பிடப்பட்ட ஊழியர் அற்பமாகத் தோன்றினார். இந்த உலகிலே கோடானகோடி ஜனங்கள் இருக்கின்றார்களே, அவர்களில் நான் யார்? நான் பிரதியீடு செய்யப்படக் கூடியவனா (கூடியவளா)? இப்படியாக நாங்கள் வாழ்ந்து வரும் சமுகம் மத்தி யிலும்,நாங்கள் இணைந்திருக்கும் குழு க்கள் மத்தியிலும், எங்கள் உறவினர் மத்தியிலும், எங்கள் நண்பர்கள் மத்தியிலும், நான் யார்? இந்த உலக மும், அதன் முறைமைகளுக்கு உடன்பட்டவர்களின் அளவுகோலின்படியும் நான் ஒரு பொருட்டாக கருதப்படலாம் அல்லது கருதப்படாமல் இரு க்கலாம். ஆனால், இயேசுவின் பார்வையிலே நாங்கள் விலையேறப்ப ட்டவர்கள்! குழுக்களாக மட்டுமல்ல, நாங்கள் ஒவ்வொருவரும் விசே ஷித்தவர்கள். அவருடைய கணக்கிலே தனித்துவமானவர்கள்! அவர் உன்னதங்களிலே வாசம் செய்தாலும், சிறுமைப்பட்டவன் மேல் கண் ணோக்கமாயுள்ளார். எங்கள் தலையிலுள்ள மயிர்கள் கூட அவர் கண க்கில் இருக்கின்றது. “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்மு டைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணி யங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.” எனவே உங்களை அற்பமாக எண்ணி, கடினமாக நடத்துகிறவர்களை குறித்துப் பயப்பட வேண்டாம். அவர்கள் மனக்கண்கள் திறக்கப்படும்படிக்கும், உணர்வுள்ள இரு தயத்தை தேவன் கொடுக்கும்படிக்கும் அவர்களுக்காக ஜெபம் செய் யுங்கள். நீங்களோ, தாழ்மையுள்ள சிந்தையைத் தரித்தவர்களாக இரு ங்கள். நீங்கள் தேவனுடைய பார்வையிலே அருமையான மகன்! அரு மையான மகள்! தேவனை அறியாமல் ஒன்றும் உங்களுக்கு நேரிடாது என்ற விசுவாசத்தில் நிலைத்திருங்கள்.

**லூக்கா 12:7**

உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப் பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, அற்பமான என்னையும் உம்மு டைய பிள்ளையாகத் தெரிந்து கொண்டீர். அதற்காக நன்றி! உம்மையே பற்றிக் கொண்டு விசுவாசத்தில் நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆத்தும மீட்பின் வழி

இந்த பூமியிலே, பல தேசங்களில், அநேக நிறங்களில், பல விதமான தோற்றங்களிலுமுள்ள ஜனங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். நாட்டுக்கு நாடு வேறுபட்ட மொழிகளும், கலச்சாரங்களும் உண்டு. அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்றவரையறைகளும் நாடுகளுக்கிடையே உண்டு. சிலர் தங்களை மேன் மக்கள் என்றும், மற்றர்கள் தங்களைவிட தரம் குறைந்தவர்கள் என்றும் எண்ணிக் கொள்வதுமுண்டு. ஆனால் யாவருக்கும் ஒரே விதமாக நடைபெறுகின்றது. இந்த பூமியிலே பிறந்த எவனும் மரிக்க வேண்டும். ஆனாலும், தங்கள் பிறப்பைக் குறித்து அல்லது தங்களுடையவர்களின் பிறப்பைக் குறித்து மேன்மை பாராட்டுகின்றவர்களும் உண்டு. இவ்வண்ணமாய் மரித்த பின்னும் தங்களுடையவர்களை குறித்து மேன்மையடைபவர்களும் உண்டு. இந்த மேன்மைகளையெல்லாம் இந்த பூமிக்குரியவர்கள் வகுத்து வைத்திருக்கின்றார்கள். பூமியின் மேன்மையினால், பரலோகத்திற்குரியவைகளை மாற்ற முடியுமோ? இல்லை, மாற்றவே முடியாது. மனிதன் மரிக்கும் நாளில், அவன் யோசனை அழிந்து போகும். மனிதன் மேன்மை பாராட்டும் அவனுடைய சரீரம் அழிந்து போகும். அவனுடைய ஆவி தேவனிடத்திற்குத் திரும்பும். ஆனால், அவன் ஆத்துமா எங்கே போகும்? இந்த பூமியிலே பாவத்திலே வாழும் ஆத்துமாவிற்கு நித்திய மரணம் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்த பாவம் என்பது என்ன? ஆதியிலே முதல் மனிதர்கள் (ஆதாம், ஏவாள்) தேவனுடைய கட்டளையை மீறி, தங்கள் சுய இஷ்டப்படி பிசாசுடன் இணைந்து தங்களுக்கென வகுத்துக் கொண்ட வழி அதுவே அந்த பாவம். இது தேவனுடைய சித்தம் அல்ல. எனவே, ஒருவனும் அந்த பாவத்தினால் அழிந்து போகாமல், நித்திய ஜீவனை அடையும் படிக்கு இயேசு ஒரு வழியை திறந்தார். இந்த வழி பரலோகத்திற்கு செல்லும் வழி. நித்திய மேன்மையடையும் வழி, யாவருக்கும் திறக்கப்பட்டிருக்கும் வழி. பாரபட்சம் ஏதும் இல்லை. அன்று தன் இஷ்டத்தினால் தன் ஆத்துமாவை கெடுத்துக் கொண்ட மனிதன், இன்று தன் இஷ்டத்தினால், அதாவது, இயேசு அண்டை வருவதினால் மறுபடியும் தன் ஆத்துமாவிற்கு நன்மை செய்ய வழியுண்டாக்கப்பட்டிருக்கின்றது.

**யோவான் 14:6**

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**ஜெபம்:** பரலோக தந்தையே, என் ஆத்துமா பாவத்திலே அழியாமல், மீட்கப்பட்டு பரலோகம் செல்லக் கூடிய இயேசு என்னும் வழியை காண்பித்திருக்கின்றீர். அந்த வழியிலே நடக்க என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை

ஒரு மறி ஆடு தன் நான்கு குட்டி ஆடுகளை நோக்கி: வளவின் அப்புறமாக நாற்றமெடுக்கும் சேறு நிறைந்த குட்டை ஒன்று உண்டு, அங்கேபன்றிகள் சேர்ந்து விளையாடுவதுண்டு, அந்தப் பக்கமாக போகாதிருங்கள் என்று புத்தமதி கூறியது. முதலாவது குட்டி "அங்கே போய் பார்ப்பதில் என்ன தவறு என்று மனதில் கூறிக் கொண்டு, தன் தாயின் ஆலோசனையைத் தள்ளி, அந்த சேற்றுப் பக்கமாக போக்கும்வரத்துமாக இருந்தது. நாளடைவில், அந்த சேற்றின் நாற்றம் அந்த குட்டி ஆட்டிற்கு பழகிவிட்டதால், அங்கிருந்த குட்டைக்கு அருகே சென்று பார்த்து வந்தது. இதுவரைக்கும் வந்து விட்டேன், ஒருமுறை இறங்கிப் பார்ப்போம் என்று ஒரு நாள் சேற்றிற்குள் குதித்து விட்டது. அதை அறிந்து மற்றய ஆட்டுக் குட்டிகளில் ஒன்று அண்ணன் சேற்றிற்குள் இறங்கி விட்டானே, நான் இறங்கினால் என்ன என்று சொல்லிக் கொண்டது. ஆனால் மற்றய ஆடுகளில் ஒன்று, சேறு அதிக நாற்றமும் அழுக்கும் நிறைந்தது. அம்மாவின் சொல்லைக் கேளாமல் அண்ணன் கெட்டுப் போனான் என்று நானும் கெட்டு போகமாட்டேன் என்று கூறியது. பிரியமானவர்களே, சில வேளைகளிலே இப்படிப்பட்ட கதைகளை நாங்கள் வாசிக்கும் போது, இது சற்றும் சாத்தியமற்ற கதை, நகைப்புக்குரியது என்று எங்களுக்குத் தோன்றலாம். சற்று சிந்தித்துப் பாருங்கள்! எங்கள் இயேசு நல்ல மேய்ப்பராக இருக்கின்றார். நாங்கள் அவர் மேய்ச்சலின் ஆடுகளாக இருக்கின்றோம். எங்களை பாவச் சேற்றில் இருந்து தூக்கி எடுத்தார். ஆனால் இன்று தேவனுடைய பிள்ளைகளில் பலர் தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற சாட்டுப் போக்குகளை தேடுகின்றார்கள். எப்படிப்பட்ட சாட்டுப் போக்குகளை அதிகமாக கூறுகின்றார்கள்? அந்த மூத்தவரே அப்படி செய்துவிட்டாராம், நாங்களும் அப்படி செய்தால் என்ன? நாங்கள் அங்கு போனால் என்ன? நாங்கள் அதைப் பார்த்தால் என்ன? என்று கூறுகின்றார்கள். பாவமாக தோன்றுகின்ற காரியங்களைக் கூட விட்டுவிடும்படியாக பரிசுத்த வேதாகமம் எங்களுக்கு அறிவுரை கூறுகின்றது. ஆதலால் நாங்கள் அவன் இப்படிச் செய்கின்றான், மற்றவன் அதைப் பார்க்கின்றான், இன்னுமொருவன் அங்கே செல்கின்றான் என்றிராமல், நாங்கள் எங்கள் மேய்ப்பனாகிய இயேசுவின் பின் செல்லுவோம்.

**சங்கீதம் 95:7**

அவர்நம்முடையதேவன். நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

**ஜெபம்:** கிருபையுள்ள நல்ல தகப்பனே, பரிசுத்த வாழ்வு வாழும்படியாய் பாவ சேற்றிலிருந்து என்னை தூக்கி பிரித்தெடுத்தீர். அதை உணர்ந்து, உம் வார்த்தைகளின்படி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மை, தீமை, ஜீவன், மரணம்

> **உபாகமம் 30:15**
>
> **இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்.**

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், தேவன் தாமே, சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். அதுமட்டுமல்ல இன்னும் அநேக உதவி ஊழியங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏனெனில், இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, பரிசுத்தவான்களாக அழைக்கப்பட்டவர்கள், முற்றிலும் கிறிஸ்துவின் சாயலில் பூரணப்பட வேண்டும். அறுவடை மிகுதி வேலையாட்கள் குறைவு என்ற பிரகாரமாய், இந்த பூமியிலே தங்களை படைத்தவரை அறியாத ஜனங்கள் பெருகிக் கொண்ட போகின்றார்கள். எனவே மீட்பின் நற்செய்தியை அறிவிக்க ஆட்கள் தேவை.மீட்கப்பட்ட ஜனங்கள், கர்த்தருடைய நாளுக்கென்று காத்திருக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். சோர்ந்து போகாமல் இருக்கும் பொருட்டு சபையானது பக்திவிருத்தி அடைய வேண்டும். இவைகளை நடப்பிப்பதற்காகவே அநேக தேவ ஊழியர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆதியிலே ஆதாம் ஏவாளாகிய முதல் பெற்றோர் நித்திய நித்தியமாய் சமாதானமான வாழ்வு வாழும்படிக்கு, நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று கட்டளை கொடுத்திருந்தார். ஆனால், அந்த கட்டளையை கைகொள்ளுவதற்கும், அதை மீறுவதற்கும் உரிய சுயாதீனத்தை மனிதர்களுக்கு கொடுத்தார். மனிதர்களை இயந்திரங்களாக உருவாக்காமல் தம்முடைய சாயலில் உருவாக்கினார். இன்று நன்மை, தீமை, ஜீவன், மரணம் இவை நான்கும் எங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. ஆதாம் ஏவாளைப் போல நாங்கள் எதையும் தெரிந்து கொள்ளலாம் என்ற சுயாதீனம் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. நன்மையையும், ஜீவனையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தேவ ஆலோசனையின் வார்த்தைகள் எங்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த வார்த்தைகளை விளங்கிக் கொள்ளும்படி ஊழியர்கள் வழியாக போதனை செய்யப்பட்டு வருகின்றது. நலமானதைப் பற்றிக் கொள்ளுகின்றவர்கள் நன்மையையும் ஜீவனையும் கண்டடைவார்கள்.

> **ஜெபம்**: அன்பின் தேவனே, நான் பக்திவிருத்தியடைந்து, கிறிஸ்துவின் சாயலில் பூரணப்படும்படி நீர் ஊழியர்கள் வழியாக கொடுக்கும் ஜீவ வார்த்தைகளை பற்றிக் கொள்ள என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தையின்படி வாழுங்கள்

நான் இந்த குற்றத்தை செய்யப் போகின்றேன், ஆனால் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள அல்லது மிகவும் குறைந்த பட்சமான தண்டனையைப் பெற்றுக் கொள்ள நாட்டுச் சட்டத்திலே எங்கேயாவது ஒரு சின்ன இடைவெளி இருக்கின்றதா என்று சில மனிதர்கள் தேடிக் கொள்கின்றார்கள். அதி வேகமாக, வாகனத்தை ஓட்டிச் சென்றால், ஓட்டிச் செல்பவருக்கும், அவரோடு இருப்பவர்களுக்கும், நெடுஞ்சாலையிலே வாகனங்களை ஓட்டிச் செல்லும் மற்றவர்களுக்கும் உயிர்ச்சேதம் ஏற்படலாம் என்பதற்காக, சாலை விதிகள் போடப்பட்டிருக்கின்றது. அவை எங்கள் கண்களுக்கு சமீபமாக இருக்கின்றது. அந்த சாலை விதிகளை மீறி, இன்னும் உயிரோடு இருப்பவர்கள், இனி அந்த குற்றங்களைச் செய்யாமல் உணர்வடையும்படி, சில சிறிய அபராதங்கள் கொடுக்கப்படுகின்றது. ஆனாலும், மனிதர்கள் என்ன செய்கின்றார்கள்? அந்த விதிகளுக்கு நாங்கள் கீழ்ப்படிந்தால் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் அது நன்மை தரும் என்பதை சிந்தியாமல். தாம் பிடிபடாமல், அதி வேகமாக வாகனங்களை செலுத்தும்படிக்கு, பொலிசார் எங்கே நிற்கின்றார்கள் என்று அறிவதற்கு கருவிகளை மாட்டிக் கொள்கின்றார்கள். அப்படி தாம் பிடிபட்டாலும், இது என்ன சின்ன அபராதம் தானே, அதை செலுத்திவிட்டு, மறுபடியும் ஓடுவோம் என்கின்றார்கள். இந்த சம்பவங்களுக்கு ஒத்ததாகவே, தேவனுடைய வார்த்தையும் எங்களுக்கு மிகவும் சமீபமாக உண்டு. ஜீவ வார்த்தைகள் தாராளமாக எங்களுக்கு போதிக்கப்படுகின்றது. எங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தும்படி பல ஆலோசனைகள் கூறப்படுகின்றது. சில இடங்களிலே தேவன் எங்களை சிட்சித்து (தகப்பன் மகனை கண்டித்து தண்டிப்பது போல) நடத்திச் செல்கின்றார். சவால்கள் நிறைந்த இந்த உலகத்திலே, நல் வழி நடப்பதற்கு துணையாக எங்களுக்கு தூய ஆவியானவரை ஈவாக தந்திருக்கின்றார். நாங்கள் நித்திய பேரின்பத்திலே பங்கடையத்தக்கதாக, தேவன்தாமே இவைகளை ஏற்படுத்தியிருக்கின்றார். எனவே, நாங்கள் குற்றம் செய்யும் வழிகளைத் தேடாமல், எங்களுக்குச் சமீபமாக இருக்கின்ற தேவ வார்த்தையைப் பற்றிக் கொண்டு, அதன்படியே எங்கள் வாழ்க்கையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

**உபாகமம் 30:14**

நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன்இருதயத்திலும் இருக்கிறது.

**ஜெபம்:** நீதியின் தேவனே, என் மாம்ச எண்ணங்களை நிறைவேற்றும் வழிகளை நான் தேடாமல், உம்மைப் பற்றிக் கொண்டு வாழும்படி நீர் தந்த வார்த்தைகளிலே நிலைத்திருந்து கனி கொடுக்க என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தைக்கு செவி கொடுங்கள்

சவுல் என்னும் மனிதன் சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யத்திற்கும் முதலாவது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். சவுல் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தாலும், அவருடைய வாழ்க்கையில் தீர்மானங்களை எடுப்பதற்கு அவருக்கு சுயாதீனம் இருந்தது. அதாவது, தேவனாகிய கர்த்தர் ஒரு காரியத்தை செய்யாதே என்று கூறும் போது, அதற்கு கீழ்ப்படிவதற்கோ அல்லது அதை தன் விருப்பப்படி செய்வதற்கோ அவருக்கு சுதந்திரம் உண்டு. ஒரு சமயம், தேவனுடைய தீர்க்கதரிசியாகிய சாமுவேல் சவுலை நோக்கி: இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக்கேளும்: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, முற்றாக அழித்துவிடும்படி கூறினார். சவுல் அந்த யுத்தத்தில் வெற்றி பெற்று திரும்பி வரும்போது, அமலேக்கின் ராஜாவாகிய ஆகாவையும், கொழுமையான ஆடுகளையும் கொண்டு வந்தான். இங்கே, தன்னுடைய சுய தீர்மானத்தின்படி, ஜனங்கள் எல்லோர் முன்பாக, தேவனுடைய வார்த்தையை அற்பமாக எடுத்து, தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தேவன் சொன்னதை செய்யாமலிருக்க துணிகரம் கொண்டான். ஏன் இப்படியாக செய்தீர் என்று தேவ மனிதனாகிய சாமுவேல் கேட்டார். அதற்கு சவுல்: தேவனுக்கு பலியிடும்படி கொழுமையான ஆடுகளை ஜனங்கள் கொண்டு வந்தார்கள் என்றான். தேவன் பலியை அல்ல கீழ்ப்படிதலையும், ஆடுகளின் இரத்தத்தைப்பார்க்கிலும் தம்முடைய வார்த்தைக்கு செவி கொடுப்பதையே விரும்புகின்றார் என்று சாமு வேல் பதில் அளித்தார். பிரியமானவர்களே, முதலாவதாக, தேவ வார்த்தைக்கு எப்போதும் கீழ்ப்படியப் பழக வேண்டும். அது எங்கள் சுபாவமாக மாற வேண்டும். தேவ வார்த்தைக்கு விரோதமாக குற்றம் செய்தேன் என்று உணர்த்தப்படும் போது, எந்த மறு பேச்சுமின்றி, அதை ஏற்றுக்கொண்டு, மனந்திரும்ப வேண்டும். என்னுடைய தீர்மானத்தை நியாய ப்படுத்த முயற்சி செய்யக் கூடாது. அவருடைய சமுகத்திலே எங்கள் இருதயம் பரிசுத்தமுள்ளதாக இருக்க வேண்டும்.

**1 சாமுவேல் 15:22**

**பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.**

**ஜெபம்**: மன்னிக்கும் தேவனே, நீர் இரக்கமுள்ள தேவன்! உம்முடைய வார்த்தைக்கு விரோதமாக நான் பாவம் செய்யாதபடிக்கும், என் குற்றங்களை நியாயப்படுத்தும்படி துணிகரம் கொள்ளாதபடிக்கும் காத்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | கார்திகை 19 | 📖 மாலை வாசகம் – எபிரெயர் 7:27

# தேவனுக்கு ஏற்ற இருதயம்

பழைய ஏற்பாட்டின் நாட்களிலே, பாவ நிவாரண பலிகள், சர்வாங்க தகன பலிகள் போன்ற பலவிதமான பலிகள் செலுத்தப்பட வேண்டியதாயிருந்தது. இவை இனி வரப்போகும் காரியங்களுக்கு நிழலாக செய்யப்பட்டு வந்தது. இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் **ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே**, அவருடைய பரிசுத்த இரத்தம் எங்கள் பாவங்களுக்காக சிந்தப்பட்டது. அவருடைய திருச்சரீரம் எங்கள் பாவங்களுக்காக அடிக்கப்பட்டது. தேவனுடைய சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். (எபி 10:1-10). இன்றைய நாட்களிலே நாங்கள் எங்கள் உதட்டின் ஸ்தோத்திர பலிகளை தேவனுக்கு செலுத்துகின்றறோம். இன்று என்று கூறுவதால், பழைய ஏற்பாட்டின் காலங்களில் துதிபலியும் ஸ்தோத்திரமும், ஜெபமும் தேவனுக்கு ஏறெடுக்கப்படவில்லை என்பது பொருள் அல்ல. தானியேல், தாவீது போன்றவர்களின் வாழ்க்கையிலே எப்போதும் ஜெபமும், துதியும் இருந்தது. அன்று தங்கள் பாவங்களுக்கான பலியாக ஆடுகளையும், காளைகளையும், புறாக்களையும் செலுத்தி, தங்கள் இருதயத்திலே மனந்திரும்பினவர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது. அப்படி மனந்திரும்புகின்ற இருதயம் இல்லாமல் பலிகளைச் செலுத்துவது தேவனுக்கு அருவருப்பாக இருந்தது. அதில், அன்றும், இன்றும் என்றும் எந்த மாற்றமுமில்லை. இன்று இயேசு கிறிஸ்து வாயிலாக பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்ற நாங்கள், அதே பிரகாரமாக மனந்திரும்பின வாழ்க்கை வாழ வேண்டும். அப்படி வாழாமல், எங்கள் உதட்டின் ஸ்தோத்திர பலிகளையும், எங்கள் காணிக்கையையும் நாங்கள் செலுத்தும் போது, அது தேவனுக்கு உகந்த வாசனையாக இருக்க மாட்டாது. தேவனுக்கு ஏற்புடைய பலிகள் எவை? அவர் பிரியப்படும் காரியம் என்ன? தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். எங்கள் மாம்ச எண்ணங்களால் எங்கள் இருதயம் கடினப்பட்டு, தொடர்ச்சியாக தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய மறுக்கும் போது, எங்கள் இருதயம் உணர்வற்றுப் போய் விடும். எனவே தேவனுடைய வார்த்தைக்கு எப்போதும் கீழ்ப்படிகின்றவர்களாய் நாங்கள் இருக்க வேண்டும்.

**சங்கீதம் 51:17**

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

**ஜெபம்**: உண்மையுள்ள தேவனே, உம்முடைய குமாரனாகிய இயேசுவின் வழியாய் பாவ மன்னிப்பின் வழியை ஏற்படுத்தினீர். அந்த பெரிதான சிலாக்கியத்தை பெற்ற நான் உண்மையுள்ளவனா(ளா)க வாழ வழி நடத்தும்.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புத்தியுள்ள ஆராதனை

நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். எனவே இந்த நகரத்திற்குரியவர்கள் (உலகத்திற் குரியவர்கள்) போன்ற வேஷம் நாங்கள் தரிக்கலாகாது. எங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும். கிறிஸ்துவின் சாயலில் வள ரவேண்டும். நாங்கள் மறுரூபமாகும்படிக்கு எப்படியான மாறுதல்கள் எங்கள் வாழ்வில் வரவேண்டும் என்ப தைக் குறித்து ரோமர் 12 அதிகாரத் திலே நீங்கள் தொடர்ந்து வாசிக்க லாம். அவற்றுள் ஒரு சில காரியங் களை இன்று தியானிப்போம். "உங் கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப்பற் றிக்கொண்டிருங்கள். சகோதர சிநேகத் திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயி ருங்கள் கனம்பண்ணுகிறதிலே ஒருவ ருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண் டியதேயன்றி சபியாதிருங்கள்." இவை களை முதலாவதாக நாங்கள் எங்கள் குடும்பத்திலும், நாங்கள் கூடி ஆராதி க்கும் சபையிலும் செய்ய பழகிக் கொள்ள வேண்டும். அதாவது, வன் மம், பகை, பொறாமை, விரோதங்களை மனதில் வைத்திருக்கும் போது, எங்கள் துதி ஆராதனை தேவனுக்கு பிரியமான ஜீவ பலியாக இருக்க மாட்டது. ஏனெனில், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகின்றவனுடைய மனதில் இப்படியாக மாம்சத்தின் கிரியைகள் குடிகொண்டிருக்கக் கூடாது. எங்கள் உள்மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு, முகஸ்துதி செய்யக் கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த அவருடைய சீஷனாகிய யூதாஸ், கர் த்தரை முத்தம் செய்து காட்டிக் கொடுத்தான். அது வஞ்சனையான முத் தம். அவனுடைய மனதிலே சாத்தான் புகுந்திருந்தான். (லூக்கா 22:3) கர்த்தரை கண்ட போது, ரபீ என்று அழைத்து முத்தம் செய் தான். எனவே தேவனுக்கு ஏற்புடைய ஆராதனை செய்யு ம்படிக்கு எங்களது இருதயத்தை எப்போதும் பரிசுத்தமாக காத்துக் கொள்வோம்.

**ரோமர் 12:1**

**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, நான் அன்பில் பரிசுத்தனாக இருக்கும்படிக்கு என்னுடைய இருதயத்தில் வஞ்சனையை வைத்திருக்காமல், பரிசுத்தத்தை காத்துக் கொள்ள என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுக்கு பிரியமான பலி

இன்றைய உலகிலே சபை ஐக்கியங்களில் மட்டுமல்ல, பழைய மாணவர் சங்கங்கள், ஊர் கூட்டுறவுகள், நண்பர்கள் ஐக்கியம் போன்ற பல குழுக்கள் வழியாக பரந்த அளவிலே பல உதவித் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அத்தகைய செயற்திட்டங்களால் அநேகர் உதவிகளை பெற்று வருகின்றார்கள். நான் செல்லும் சபை ஐக்கியத்திலே நடை பெற்றுவரும் செயற்திட்டத்திற்கு என் பங்களிப்பை கொடுத்து விட்டேன், எனவே தானதர்மங்களை செய்வதற்கான இந்த வருடத்திற்குரிய என்னுடைய கடப்பாடு முடிந்து விட்டது என்று சிலர் கூறுவார்கள். அல்லது, பலரும் இதற்கு ஒத்தாசையாக இருக்கின்றார்கள், இப்போது என்னிடமும் உதவி செய்யும்படி கேட்கின்றார்கள், நானும் ஏதாவது செய்ய வேண்டும் என்று கூறுபவர்களும் உண்டு. இத்தகைய கொடுப்பனவுகள் மனப்பூர்வமாகவும் உற்சாகத்துடனும் செலுத்த ப்படும் தானதர்மங்கள் அல்ல. அதாவது, நாவினாலே கர்த்தருக்கு நன்றி பலிகளை செலுத்தும் போது, அவை எங்கள் இருதயத்திலிருந்து எழுந்து வர வேண்டும். இருதயத்திலிருப்பதற்கும் (எங்கள் வாழ்க்கைக்கும்) நாங்கள் சொல்லும் நன்றி பலிகளுக்கும் தொடர்பில்லாதிருக்கும் போது அங்கே உண்மை இருக்காது. அங்கே கருத்தான துதி இருக்காது. அதுபோலவே, செயற்திட்டங்களில் பங்களிப்பதுடன் நிறுத்திவிடாமல், தானதர்மங்கள் எங்கள் இயற்கை சுபாவமாக மாற வேண்டும். இன்று தேவனை துதிப்பது பல மனிதர்களுக்கு பளுவுள்ள வேலை போல தோன்றுகின்றது. "எப்படியாவது இந்த நேரத்தை முடித்து விட்டால் நான் என்னுடைய மற்ற அலுவல்களுக்கு கடந்து சென்றுவிடலாம்" என்று, எண்ணங் கொள்ளும் மனிதர்களும் இருக்கின்றார்கள். அப்படி அல்ல, தேவனை ஆராதிப்பது எங்கள் சுபாவமாக மாற வேண்டும். அதேபோல, எங்களைச் சூழ இருக்கின்றவர்களு க்கு உதவி செய்வது (சரீர உதவி, பொருளாதார உதவி, ஆலோசனை கூறுதல்) எங்கள் சுபாவமாக மாற வேண்டும். பரம பிதா பூரண சற்குணராய் இருப்பது போல, அவருடைய பிள்ளைகளாகிய நாங்கள் கொடுப்பதில் வளர்ந்து பெருகுவோம்.

**எபிரெயர் 13:16**

**அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள் இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, கடமைக்காக நான் தானதர்மங்களை செய்யாமல், முழு இருதயத்தோடும், என்னால் முடிந்த உதவிகளை அயலவர்களுக்கு செய்யும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மைகளை பகிர்ந்துகொடுங்கள்

**கலாத்தியர் 6:10**

**ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்.**

தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுத்த வாழ்நாட்களிலே, பொதுவாக அவன் தன் தாய்தந்தையாருக்கு கீழ்ப்பட்டிருக்கும் ஆண்டுகளைவிட அவன் தன் சுயத்தில் முடிவுகளை எடுக்கும் ஆண்டுகள் அதிகமாகயிருக்கின்றது. அந்த ஆண்டுகளிலே அறிந்தோ அறியாமலோ அவன் பிரயோஜனப்படுத்திக் கொண்ட நாட்கள் எத்தனை? அவன் வீணில் கழித்த நாடக்கள் எத்தனை? எத்தனை தடவைகள் அவன் சரியான முடிவுகளை எடுத்தான்? எத்தனை முறை தவறான முடிவுகளை எடுத்தான்? இதை அவரவர் தங்கள் நாட்களைக் குறித்து கணக்குக் பார்க்க முடியும். ஆனால் மனிதர்களோ, தங்களுக்கு கீழ்ப்பட்டிருக்கின்றவர்களுடைய விடயத்திலே, அவர்கள் எந்த தவறும் செய்யாமல் பரிபூரண முள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். எடுத்துக்காட்டாக, ஊரிலே வசிக்கும் ஏழைக்கு நான் உதவி செய்தால் அவன் அந்த உதவியை துஷ்பிரயோகம் செய்துவிடக் கூடும். பொருளாதாரத்தை நடத்தும் ஆளுமை அவனுக்கில்லை என்று சொல்லி அவனுக்கு உதவுவதற்கு தயக்கம் காண்பிக்கின்றார்கள். அதே பிரகாரமாக பரம பிதா மனிதர்கள் யாவரும் பரிபூரணராக வரும்வரைக்கும் அவனுக்கு நன்மையான ஈவுகளை கொடுக்க மாட்டேன் என்று நினைத்தால் மனிதரில் யாரும் உயிர்வாழ முடியாது. அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிற வர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. இந்த உலகிலே பல மட்டங்களிலே தங்களுக்கு கிடைக்கும் சலுகைகளையும் அதிகாரங்களையும் துஷ்பிரயோகம் செய்பவர்கள் இருக்கின்றார்கள். அதனால் தேவன் தம்முடைய கிருபையை மறைத்து வைக்கவில்லை. துஷ்பிரயோகம் செய்கின்றவன், தன் வாழ்க்கையை குறித்து அவன் தேவனுக்கு கணக்கு கொடுப்பான். தேவனுடைய பிள்ளைகளாகிய நாங்கள் எங்களிடம் இருக்கும் நன்மையை பகிர்ந்து கொள்ளாமல் எங்களுக்கென்று மறைத்து வைக்கும் போது நாங்கள் எங்கள் வாழ்நாட்களை துஷ்பிரயோகம் செய்கின்றவர்களாக மாறிவிடுவோம்.

**ஜெபம்:** நன்மை செய்யும் பரம தந்தையே, உம்முடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்ட நாங்கள், நீர் எங்கள் மேல் பொழியும் நன்மைகளை நாங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் இருதயத்தைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழியாத நித்திய பொக்கிஷம்

இயேசுவை தன் வாழ்க்கையில் அறியாமல், அவருடைய வழியிலே வாழாமல் இருக்கும் ஐசுவரியவான் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல் லும் போது, ஏழையாக கடந்து செல்கின்றான். ஆனால் இயேசுவை யார் என்று அறிந்து, அவருடைய வழியிலே வாழ்கின்ற ஏழை, அவன் செல்வந்தனாக இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்கின்றான். ஏனெனில், “பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவே ண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திரு டரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பர லோகத்திலே உங்கள் பொக்கிஷங்க ளைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.” இந்த உலகத்தின் ஐசுவரிய த்தினால், பரலோக நித்திய ஐசுவரியங்களை கொள்வனவு செய்து கொள்ள முடியாது. ஒரு வேளை நாங்கள் மிகையாக தானதர்மங் களை அள்ளி வழங்குகின்றவர்களாக இருந்தாலும், நாங்கள் ஆத்தும மீட்பை பெற்றிடாமல, எங்கள் இருதயத்தை இயேசுவின் வார்த்தைக்கு ஒப்புக் கொடுக்காமலும் இந்த உலக போக்கின்படி வாழுவோமாக இருந்தால் அதனால் இலாபம் ஒன்றுமில்லை. ஒருவன் இந்த உலகம் முழுவதையும் தனக்கென்று ஆதாயப்படுத்தி, இந்த உலகிலே நன் பெயர் சூடப்பட்டு வாழ்ந்தும், தன் ஆத்துமாவை கெடுத்துக் கொள் வானாக இருந்தால் அவனுடைய கிரியைகளுக்குரிய பலன் இந்த உல கத்தோடு முடிந்து போய்விடும். ஆனால், ஒருவன் எந்த நிலையில் இருந்தாலும், அவன் இந்த உலக அளவுகோலின்படி வறியவனாக இரு ந்தாலும், செல்வந்தனாக இருந்தாலும், அன்றாடம் உழைக்கின்றவனாக இருந்தாலும், அவன் இந்த உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் பற்றிக் கொள்ளாமல், தேவனுடைய வார்த்தையின் வழியிலே தன் வாழ் க்கையை வாழ்ந்து, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ் க்கையிலே நிறைவேற்றும் போது, அவன் அழியாததும் மாசற்ற துமான, மகிமையுள்ள கிரீடத்தை பரலோகிலே பெற்றுக் கொள்வான். எனவே உங்களுக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கையை, உங்களுக்கு கொடு க்கப்பட்டிருக்கின்ற நேரத்தை, உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற செல்வத்தை (அவனவனுக்கு கொடுக்கப்பட்ட அளவின்படி) ஞான முள்ளவர்களாக, அழியாத நித்திய ராஜ்யத்திற்காக பயன்படுத்துங்கள்.

**மத்தேயு 6:20**

பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, நீர் எனக்கு தந்த இந்த வாழ்க்கை யிலே, அழியாத பொக்கிஷங்களை சேர்த்து வைக்கும்படிக்கு எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | கார்திகை 24

📖 மாலை வாசகம் – எபிரெயர் 6:1–2

# பிள்ளைகளின் வளர்ச்சி

ஒரு மனிதன் தன் வேலைக்குச் சென்று திரும்பும் போது, அவனுடைய சிறு பிள்ளைகள் நான்கு பேரும் பெரும் எதிர்பார்ப்போடு காத்திரு ப்பார்கள். ஏதாவது இனிப்புப் பண்டங்களையோ அல்லது சிறு பரிசுப்பொருப் பொருட்களை தங்கள் தந்தை கொண்டு வரும்போது, அவர்களுக்கு பெரும் கொண்டாட்டமாக இருக்கும். மேலும், தங்கள் தங்கள் பிறந்த தினத்தை மட்டுமல்ல, நத்தார் மற்றும் புதுவருட நாட்களை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பா ர்கள். தந்தையும் எப்படியாவது, அந் நாட்களை முன்னிட்டு, அதிக மணித்தியா லங்கள் வேலை பார்த்து, தன் பிள் ளைகள் சந்தோஷமாக இருக்க வேண் டும்என்று எப்படியாவது பரிசுப் பொரு ட்களையும் தின்பண்டங்களையும் வாங் கி வருவார். ஆண்டுள் கடந்து சென்ற தும், ஒரு நாள், அந்த மனிதனுடைய மூத்த மகனு டைய கேள்வி அவன் தந்தையின் உள்ளத்தை தொட்டது. “அப்பா, ஆண்டாண்டுகளாக இப்படியெல்லாம் எங்களுக்கு பல பொரு ட்களை வாங்கி வருகின்றீர்களே, இவற்றிற்கெல்லாம் எங்கே பண த்தை பெற்றுக் கொள்ளுகின்றீர்கள், இவையெல்லாம் உங்களுக்கு அதி கமான செலவாகுமே, ஆதலால் எனக்கு நீங்கள் கொடுத்தது போதும், இனி தம்பி தங்கைகளுக்கு மாத்திரம் கொடுங்கள் என்றான்” தந் தையின் கண்களிலே கண்ணீரும் மனதிலே பூரிப்பும் உண்டாயிற்று. ஏன் அப்படி உண்டானது? தன் பிள்ளைகளுக்கு பரிசுப் பொருட்களை கொடுப்பது தந்தைக்கு மிகவும் பிரியமானது. அவர்களுடைய கபடற்ற குழந்தை உள்ளத்தை அவர் விரும்புகின்றார். ஆனால் எப்போதும் குழந்தைத்தனமாக பிள்ளைகள் வாழ்வதை அவர் விரும்பவில்லை. தன் மூத்த மகனின் ஆளுமையின் ஒருபடி முன்னேற்றம், அந்த மனிதனு க்கு பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது. பிரியமானவர்களே, எங்கள் பரம பிதா சம்பூரணர். அவரிடத்திலே எந்த நன்மையும் குறைவுபடுவதில்லை. அவர் எங்கள் வாழ்க்கையில் நாங்கள் அதி சிறந்ததை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை விரும்புகின்றார். நாங்கள் எப்போதும் சிறுபி ள்ளைத் தனமாக இருக்காமல், நாங்கள் தம்முடைய திருக்குமார னாகிய இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களிலே, நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார்.

**1 கொரிந்தியர் 14:20**

**சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள் துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, நீர் எங்கள் மேல் வைத்த அன்பினால், உம்முடைய குமாரனாகிய இயேசுவை எங்களுக்காக கொடுத்தீர். உம்முடைய சித்தப்படி நானும் அவரைப் போல மாற என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்களுக்கு சமாதானம்

இன்று பலருடைய வாழ்க்கையிலே பொருளாதாரம் பெரும் பிரச்ச னையாக இருக்கின்றது. இதனால் உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளை சந்திப்பதை குறித்து சிலர் மிகவும் கவலை யடைகின்றார்கள். எதிர்பாராத விதமாக வேலையில்லாப் பிரச்சனை, இழப்புக்கள், இயற்கை அனர்த்தத்தின் அழிவுகள் மனிதர்களுடைய வாழ் வின் நிலையை முற்றிலுமாய் மாற்றி விடுகின்றது. என்னத்தை உண்போம்? என்னத்தை அணிவோம்? என்ற ஏக்கம் அவர்களை வாட்டுகின்றது. இதனால் வாழ்க்கையில் சமாதானத்தை இழந்து விடுகின்றார்கள். ஒருவன் தன்னுடைய தேவைகளை தந்தையிடம் தெரியப்படு த்துவதில் தவறு ஏதும் இல்லை. ஆனால், தங்கள் நாளாந்த ஆகாரத்திற்காகவும், தங்கள் உடைகளுக்காகவும் உலகத்தி லுள்ள தங்கள் தகப்பனிடத்தில் பிள்ளைகள் இரந்து கேட்பார்களோ? அல்லது தன் பிள்ளை பசியாய் வாடும்படி விட்டுவிடும் தகப்பன்மார் உண்டோ? உலகத்திலே இப்படிப்பட்டவர்களை காண்பது அரிது. தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய் யப்பண்ணுகின்ற பரமபிதா, தம்முடைய பிள்ளைகளை மறந்து போவாரோ? உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனு க்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறி ந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடு ப்பது அதிக நிச்சயம் அல்லவா? ஆம், பரம பிதா நிச்சயம் நன்மை செய்வார். பொருளாதார பிரச்சனைகள் மட்டுமல்ல, இன்னும் பல சொல்ல முடியாத மனப்புண்கள் வேதனைகள் மனிதர்களை வாட்டு வதால் நிர்க்கதியான நிலையில் வாழ்கின்றார்கள். என் சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்லுகின்றேன் என்று சொன்ன இயேசுவை விசு வாசியுங்கள். அவருடைய வார்த்தையை விசுவாசியுங்கள. அவர் எல்லாக் குறைவுகளையும் நிறைவாக்கி நடத்துவார்.

**யோவான் 14:27**

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்**

**ஜெபம்:** சமாதானம் தரும் தேவனே, அற்ப விசுவாசியாக இராமல், நீர் ஒருபோதும் என்னை கைவிடமாட்டீர் என்ற வார்த்தையை இறுகப்பற்றிக் கொண்டு விசுவாசத்திலே நிலைத்திருக்க என்னைப் பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் மனதின் பாரம் என்ன?

இன்று உங்கள் மனதைக் கலங்கடிக்கும் பாரம் என்ன? உங்கள் மனதின் ஏக்கம் என்ன? வேதத்திலுள்ள பரிசுத்தவான்களின் வாழ்க்கையை உற்று நோக்கிப் பாருங்கள். அவர்கள் எங்களுக்கு முன்னோடிகளாக, பல பாடுகள் மத்தியிலும், தேவனுக்கு எதிராக முறுமுறுக்காமல் வாழ்ந்தார்கள். உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் இவைகள் யாவற்றையும் சகித்து தேவனுடைய திருப்பணியை நிறைவேற்றி முடித்தார்கள். (ரோமர் 8:35-39). இந்த உலகத்தினால் உண்டாகும் அசௌகரியங்களை தங்கள் வாழ்வின் செழிப்பின் அளவுகோலாக எண்ணாமல், உலக பாடுகள் மத்தியிலும் தேவனை அதிகமாக நேசித்தார்கள். மேலும், எங்கள் மத்தியிலும் பலர் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து இந்த உலகைவிட்டு கடந்து சென்றிருக்கின்றார்கள். இன்னுமாய் தேவனுக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கும் தேவப்பிரியர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையை கவனித்துப் பாருங்கள். அவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி சென்றார்கள். தங்கள் சரீரங்களை போஷிக்க தேவையான ஆகாரம் குறைவுபட்டாலும், உடுத்துவதற்கு மாற்று வஸ்திரங்கள் இல்லாவிடினும், தங்குமிடங்கள் அசௌகரியமாக இருந்தாலும் அவை யாவற்றையும் பொருட்படுத்தாது, தங்கள் ஆத்துமாவை போஷிக்கும் ஜீவவசனத்தை மற்றவர்களும் அறிய வேண்டும் என்று அதிகமாக பிரயாசப்படுகின்றார்கள். அதைப் போலவே நாங்களும் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்ல வேண்டும். இன்று எங்களை அழுத்தும், நாளையைக் குறித்ததான மனதின் பாரங்கள் ஏக்கங்களை உதறித் தள்ளி விட்டு, இந்த உலக மாயையிலே சிக்கி அழிந்து போய் கொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் குறித்ததான ஏக்கமும், நான் அறிந்து கொண்ட சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற பாரமும் எங்களில் உருவாக வேண்டும். அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்று இயேசு கூறியிருக்கின்றார். பிரியமானவர்களே, உங்கள் கவலைகள் எல்லாவற்றையும் கர்த்தர் மேல் வைத்து விடு ங்கள். எந்தக் காரியமும் அவருடைய அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முடியாது என்ற நிச்சயத்தோடு முன்னேறிச் செல்லுங்கள்.

**1 பேதுரு 5:7**

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, உயர்வானலும், தாழ்வானாலும் நீர் என்னுடைய நிலைமையை நன்றாக அறிந்திருக்கின்றீர் என்ற நிச்சயத்தோடு நான் உம்முடைய வழியில் நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பாக்கியவான் யார்?

உலக ஐசுவரியமும், உலக தரித்திரமும் என்ற தலைப்பு, எங்கள் மத்தியிலே அடிக்கடி பேசப்படுகின்றது. எங்கள் இரட்சகரும் கர்த்தரு மாகிய இயேசு கிறிஸ்துவும் இதை குறித்துப் பேசியிருக்கின்றார். “ஐசு வரியமுள்ள ஒரு வாலிபன்” மற்றும் “ஏழை விதவையின் காணிக்கை” போன்றவை குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து வேதத்திலுள்ள நிருபங்களில் இந்த விடயத்தைக் குறி த்து பல இடங்களிலே குறிப்பிடப்பட்டுள் ளது. இந்த உலகத்திலே தரித்திரராக இருப்பது பரலோகம் கடந்து செல்வத ற்குரிய கடவுச் சீட்டு அல்ல. ஏனெனில், தேவனை அறியாத பல மனிதர்கள் தங் கள் வாழ்க்கையிலுள்ள எல்லாச் செல் வங்களையும் துறந்து, துறவறம் பூண்டு, காடும் வனாந்திரமுமான இடங்களுக்கு சென்றிருக்கின்றார்கள். எனவே தரித்திரம் என்ற போர்வையை மட்டும் போர்த்துக் கொண்டு நாங்கள் பரலோகம் செல்ல முடியாது. அதே நேரத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் சிலர் செய்யும் தானதர்மங்களுக்கு முடி வில்லை. அதனால் அவர்கள் உலகத்திலே பலவற்றை ஆதாயப்படுத் திக் கொள்கின்றார்கள். இந்த உலகம் முழுவதையும் அவர்கள் ஆதா யப்படுத்தினாலும், தங்கள் ஆத்துமாவிற்கு நன்மையைத் தேடாவிட்டால் அதனால் அவர்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. இந்த காரிய த்தின் கடைத்தொகையைப் பார்ப்போமென்றால், ஒருவன் இந்த உலக ஐசுவரியம் நிறைந்தவனாக இருந்தாலும், உலக தரித்திரம் உடைய வனாக இருந்தாலும், “இந்த உலகிலே வாழும் போது பரம பிதாவின் சித்தத்தை செய்கின்றவன் எவனோ, அவனே நித்திய ஜீவனை சுதந்த ரித்துக் கொள்ளுவான்” தரித்திரம் இருந்தும் தேவனை தூஷிக்கின்ற மனிதர்கள் இருக்கின்றார்கள். ஐசுவரியம் இருந்தும் அந்த ஐசுவரிய த்தை அழிந்து போகும், இந்த உலக ஆஸ்தி என்று அதை அற்பமாக எண்ணி, தங்கள் நம்பிக்கையை, தேவன் பேரில் வைத்திருக்கும் செல்வ ந்தர்களும் இருக்கின்றார்கள். ஆதலால், நாங்கள் எந்த நிலைமையில் இருந்தாலும் தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனையின் வழி யில் வாழ்வதே சாலச் சிறந்தது. தேவனுடைய வழி உத்தமமானது. கர்த் தருடைய வசனம் புடமிடப்பட்டது. தம்மை நம்புகிற அனைவரு க்கும் அவர் கேடகமாயிருக்கிறார். அவர் வழியிலே நடக்கின்றவர்கள் நித்திய சமாதானத்தை அடைந்து கொள்கின்றார்கள்.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

**ஜெபம்:** பரலோக தந்தையே, இந்த உலக ஐசுவரியமோ, உலக தரித்தி ரமோ என்னை மேற்கொள்ளாதபடிக்கு, நான் உமக்குப் பயந்து, உம்மு டைய வழியிலே வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எல்லாத் தீமையின் வேர்

நாளாந்த வியாபார வருவாயிலே தன் குடும்பத்தை ஒழுங்காக நடத்தி வந்த வியாபாரி ஒருவன், தேவ காரியங்களிலே பயபக்தியுள்ளவனாக இருந்து வந்தான். தினமும் காலை எழுந்து தேவனைத் துதிப்பதிலும் ஞாயிறு காலையிலே முழுக்குடும்பத்துடனும் ஆலயம் செல்வதிலும் பெரும் மகிழ்ச்சி அவனுக்கிருந்தது. இப்படியாக ஆண்டுகள் கடந்து செல்லும் போது, அவன் செய்து வந்த வியாபராம் பெரிதாய் விருத்தியடைந்தது. அவன் தாராளமாக அன்னதானம் வழங்குவதிலும், தேவ ஊழியங்களைத் தாங்குவதிலும் மிகவும் உற்சாகமாக இருந்தான். கை நிறைய பணம் இருந்ததால், தன்னுடைய பிள்ளைகளை விளையாட்டுத் துறை, இசை த்துறை பயிற்சிக்குரிய ஒழுங்குகளைச் செய்தான். அந்தத் துறைகளிலே பிள்ளைகள் ஆர்வம் காட்டினார்கள். இசை, விளையாட்டு துறையின் சில முக்கிய நிகழ்ச்சிகள் போட்டிகள், வார இறுதியில் (சனி, ஞாயிறுக் கிழமைகள்) காலையிலே நடைபெற்றது. இதனால், இப்போது குடும்பமாக சபை ஆராதனைகளிலே கலந்து கொள்வது இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுப்போயிற்று. தந்தையார், விருத்தியடைந்த தன் வியாபாரத்தைக் கவனிப்பதற்கு நம்பிக்கையானவர்கள் இல்லாதபடியால், வியாபார அலுவல்களிலே அதிக நேரத்தை செலவிட்டார். தாயார், பிள்ளைகளுடைய பாடங்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு அவர்களை கொண்டு செல்வதில் அதிகமான நேரத்தை செலவிட்டார். இதனால் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வை குறித்த எண்ணம் குறைந்து கொண்டே போயிற்று. பிரியமானவர்களே, இந்த சம்பவத்தின் கருப்பொருளை சிந்தித்துப் பாருங்கள். உலக ஐசுவரியம் எங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளாதபடிக்கு நாங்கள் அதை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் உலக ஐசுவரியத்தோடு, அதைச் சார்ந்த பல காரியங்களைக் குறித்த ஆசை எங்கள் உள்ளத்தை மெதுவாக பற்றிப் பிடித்துவிடும். இந்த ஆசை மனிதர்களை சோதனையிலும், கண்ணியிலும், கேட்டிலும், அழிவிலும், மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுத்திவிடும். எனவே உலக ஐசுவரியத்தை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**1 தீமோத்தேயு 6:10**

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.**

**ஜெபம்:** என்றும் மாறாத தேவனே, போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே எப்போதும் நான் கொண்டிருக்கும்படி மனப்பிரகாசமுள்ள கண்களைத் தந்து உமது பாதையில் நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனைச் சார்ந்த வாழ்க்கை

> **நீதிமொழிகள் 30:9**
>
> நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும் தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.

குடும்பக் கஷ்டங்கள் தலை தூக்கும் போது, தங்கள் குடும்பத்தின் பொருளாதார அவல நிலைமைகளினாலே, சிலர் பல விதமான சோதனைகளில் அகப்பட்டு விடுகின்றார்கள். உள்ளதை சொல்லி உதவியை கேட்டால் மனிதர்கள் நம்ப மாட்டார்கள். எனவே பிழைப்புக்காக இல்லாததை சொல்லி தங்கள் அடிப்படைத் தேவைகளைச் சந்திக்கும் நிலைக்கு ஒரு சில மனிதர்கள் தள்ளப்பட்டு விடுகின்றார்கள். இந்த நிலைமை திருட்டுதனத்திற்கு ஒத்ததாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் தான் வசிக்கும் குக்கிராமத்திலிருந்து மருத்துவ சோதனைக்காக, கர்ப்பிணியாக இருக்கும் தன் மனைவியோடு பட்டணத்திற்கு சென்றார். சோதனைகள் முடிந்து திரும்பும் போது, மனைவிக்கு பசி எடுத்ததால், தங்கள் வசதிக்கேற்ப ஒரு சிறிய உணவுச் சாலையில் உணவருந்தும்படி சென்றார்கள். கணவனானவன், உணவுச் சாலையிலிருந்த உணவை பார்த்த பின்பு, சற்று தயக்கத்துடன், கடைக்காரரை நோக்கி: "ஐயா, மனைவிக்கு குழந்தை கிடைக்கப் போகின்றது. கொஞ்சம் சுகவீனமாக இருக்கின்றாள். இந்த உணவு அவள் உண்பதற்கு ஏற்றதா" என்று கேட்டான். அந்த உணவு நாட்பட்டது என்று அறிந்திருந்தும், கடையின் உரிமையாளர், தன்னுடைய நாளாந்த உழைப்பிற்காக, ஆம்! அது இன்று சமைத்த உணவு தான் என்று அதை அவர்களுக்குக் கொடுத்தார். அதை உட்கொண்டு சில மணித்தியாலங்களில் அந்த மனிதனின் மனைவி மிகவும் சுகவீனமுற்றாள். அந்தக் கடைக்காரரோ குறிப்பிட்ட நாளின் வருவாயை எப்படியாது உழைத்துவிட வேண்டும் என்பதால், உள்ளதை சொன்னால் நஷ்டம் ஏற்படும் என்று பொய்யைச் சொல்லி இன்னுமொருவருடைய பணத்தை தன் வசமாக்கிக் கொண்டார். சகோதரரே, மிகையான செல்வத்தினால் நாங்கள் விசுவாசத்தை விட்டு அகன்று போகாமலும், வறுமையினால் வஞ்சகமான காரியங்களை நாங்கள் செய்துவிடாதபடிக்கும், நாங்கள் எப்போதும் தேவனுக்கேற்ற உணர்வுள்ள இருதயத்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, நெருக்கடியான நேரங்களிலும், செழிப்புள்ள காலங்களிலும் நான் உமக்கெதிராக பாவம் செய்யாதபடிக்கு உம்மையே சார்ந்து வாழும் வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நெருக்கடி வேளையில் புகலிடம்

மகனே, வாலிபமும் உடற்பலமும் எப்போதும் தற்போது இருப்பதைப் போல இருக்கமாட்டாது. எனவே, இந்த நாட்களிலே, உடலுக்கு தேவை யான ஊட்டச்சத்துக்களுள்ள உணவுகளை நீ சாப்பிட வேண்டும். கம் யூட்டர் சாதனங்களோடு அதிக நேரத்தைச் செலவிடாமல், நீ உடற்பயி ற்சி செய்ய வேண்டும், நேரத்திற்கு நித்திரைக்குச் செல்வதை வழக் கமாக்கிக் கொள்ள வேண்டும் என்று சில தசாப்த்தங்களுக்கு முன் தனது பெற் றோர் கூறிய அறிவுரையானது, வைத்தி யசாலையில் இருக்கும் ஒரு மனிதனு க்கு ஞாபகம் வந்தது. இளமைக் கால த்திலே, நான் என் வாழ்க்கையை சற்று மாற்றியமைத்திருக்கலாமே என்ற கவலை அந்த மனிதனின் மனதிலிருந் தது. ஆனால் இப்போதும் கூட வைத்தி யர் கூறும் அறிவுரையை ஏற்று நடக்க அவனுக்கு மனதில்லை. இந்த சம்பவத்தை எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பாரு ங்கள். வருமுன் காப்போம் என்ற பதத்திற்கு அமைய வேதத்திலே எல் லா வயதுடையவர்களுக்கும் ஆலோசனைகள் தாராளமாக உண்டு. சரீரத் திற்கு எப்படியாக ஊட்டச்சத்துள்ள உணவு அவசியமோ அதே போல, தேவ ஆலோசனைகள் ஆத்துமாவிற்குரிய ஆன்மீக ஆகாரமாக இரு க்கின்றது. இந்த ஆலோசனைகள் எங்கள் வாழ்க்கையை கண்ணியி லிருந்து பாதுகாக்கின்றது. மனிதர்கள் தேவ ஆலோசனைகளை கேட்க மனதில்லாமல், பலவிதமான பிரச்சனைகளிலே தங்களை சிக்கவைத்துக் கொள்கின்றார்கள். அப்படியான நிலைமையில் “அட, எனக்கு போதிக் கபட்ட வார்த்தைகளை கேட்டு நான் என் வாழ்க்கையில் தீர்மானம் எடுத்திருக்கலாமே” என்று கூறிக் கொள்வார்கள். இது நோய் கொண்ட பின்பு மருந்து உட்கொள்வதைப் போன்றதாகும். சில வேளைகளிலே உட்கொள்ள வேண்டிய மருந்துகள் கசப்பான அனுபவமாக இருக்கும். தேவனுடைய வார்த்தையே எங்கள் அருமருந்தாக இருக்கின்றது. இந்த உலகத்திலே நாங்கள் ஒப்பனையாக பேசும் காரியங்களிலே குறைவு கள் இருக்கலாம். ஆனால், கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத் துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. (சங்கீதம் 19:4). கர்த்தருடைய ஆலோசனைகளிலே நடக்கும் போது, நெருக்கடிகள் அலையலையாய் வந்தாலும், அவை யாவற்றிலிமிருந்து தம்முடையவர்களை அவர் மீட் டுக் கொள்வார்.

**நீதிமொழிகள் 3:1**

**என் மகனே, என் போதகத்தை மறவாதே உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது..**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, நான் சமாதானமாய் இந்த பூமி யிலே வாழும்படிக்கு உம்முடைய ஆலோசனைகளை தள்ளாமல் அவை களின்படி வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**‘உள்ளான மனிதன்’** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்!

உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய -த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ -னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca